வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 06

28.06.2025 சனிக்கிழமை

இதழ் : 179

பக்கங்கள் : 12




செம்மணிப் புதைகுழி அகழ்வில்

# சர்வதேச தலையீட்டை அங்கீகரிக்கிறது ஐ.நா.!

## பாரபட்சமற்ற விசாரணைக்கும் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 28

**இலங்கையில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியின் அகழ்வு நடவடிக்கைகள் சர்வதேச தரத்துக்கு அமையவும் பாரபட்சமின்றியும் நடத்தப்படவேண்டும் என்ற பாதிக்கப்பட்டவர்களின் தொடர்ச்சியான கோரிக்கையை ஐக்கிய நாடுகள் சபை ஆதரித்துள்ளது.**



"உண்மையை வெளிக்கொண்டு வரும் திறன் கொண்ட தடயவியல் நிபுணத்துவம் கொண்ட சுயாதீன நிபுணர்களால் நடத்தப்படும் விரிவான, வலுவான விசாரணைகள் மூலம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் வலி மற்றும் துன்பத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதே பாரிய மனித புதைகுழிகள் விடயத்தில் செய்ய வேண்டிய விடயம்" என ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க், யாழ்ப்பாணம், செம்மணி, சித்துப்பாத்தி மனிதப் புதைகுழிகளுக்கு அருகில் தெரிவித்த கருத்துடன் கூடிய காணொளி ஒன்றை வெளியிட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபை, நாட்டிலுள்ள உள்ள அனைத்து 11

## யாழ். மாநகர சபையின் விசேட அமர்வில் குழப்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்ப்பாண மாநகரின் நியதிக் குழுக்களை நியமிப்பதில் உறுப்பினர்களிடையே ஒருமித்த கருத்தின்மையால் யாழ்.மாநகர சபையின் நேற்றைய விசேட அமர்வில் குழப்ப நிலை ஏற்பட்டது.

யாழ்.மாநகர சபையின் முதலாவது அமர்வின் தொடர்ச்சியாக நேற்றையதினம் விசேட அமர்வுக்காக கடந்த 23 ஆம் திகதியன்று திகதியிடப்பட்டிருந்தது. அதனடிடையில் நேற்று காலை முதல்வர் வி.மதிவதனி தலைமையில் சபையின் விசேட அமர்வு ஆரம்பமானது. 11

## செம்மணி புதைகுழி குறித்து உரிய விசாரணை வேண்டும்

லங்கா மக்கள் கட்சி கோரிக்கை

கொழும்பு, ஜூன் 28

செம்மணி மனித புதைகுழியில் இருந்து மீட்கப்படும் எலும்புக்கூட்டு தொகுதிகள் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்படவேண்டும் என லங்கா மக்கள் கட்சியின் பொதுச் செயலாளர் மதுபாசன பத்மசாந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

செம்மணி மனித புதைகுழி தொடர்பில் 11

## பலாலி சந்தையை விடுவிக்கவேண்டும்

வலி.வடக்கு பிரதேச சபை தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள, யாழ்ப்பாணம் பலாலி சந்தையை விடுவிக்க வேண்டும் என, வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் நேற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி. வடக்கு பிரதேச சபையின் கன்னி அமர்வு நேற்று, தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது கருத்து வெளியிட்ட தவிசாளர், 11

## இந்திய மீனவர் நால்வர் மீட்பு!

மன்னார், ஜூன் 28

சீரற்ற காலநிலையின் காரணமாக தலைமன்னாருக்கு அப்பால் உள்ள இலங்கை கடல் பகுதியில் உள்ள ஏழாவது மணல் திட்டுக்கு அருகே இந்திய கடற்பரப்பிலிருந்து இலங்கை கடற்பரப்புக்குள் மிதந்து வந்து கடலில் கவிழ்ந்த இந்திய 11

## வடக்கில் காணி விடுவிப்பின்போது பாதுகாப்புக்கு பங்கம் வரக்கூடாது!

சரத் பொன்சேகா எச்சரிக்கை



கொழும்பு, ஜூன் 28

"சிங்கப்பூர் மற்றும் சுவிற்சர்லாந்தில் இருக்கும் நிலை இங்கில்லை. எனவே, வடக்கில் படை முகாம் அகற்றல் மற்றும் காணி விடுவிப்பின்போது பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படாத வகையிலேயே முடி வுகள் எடுக்கப்படவேண் டும்."

-இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகா தெரிவித்தார்.

அரச தொலைக் காட்சிக்கு வழங்கிய 02

## இந்திராகாந்தியின் உடன்படிக்கையே இன்று இந்திய மீனவர் கைதுசெய்யப்படக் காரணம்!

ஜெய்சங்கர் சுட்டிக்காட்டு



புதுடில்லி, ஜூன் 28

இந்தியாவில் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி ஆட்சியின்போது பிறப்பிக்கப்பட்ட அவசர நிலையின் போது கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையே இன்று இந்திய மீனவர்களை இலங்கை கைது செய்வதற்கு காரணம் என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். 11

## வடக்கில் காணிகளை சுவீகரிக்கும் வர்த்தமானிக்கு இடைக்கால தடை!

உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவு

கொழும்பு, ஜூன் 28

காணி நிர்ணயச் சட்டம் பிரிவு 4 இற்கு அமைவாக வடக்கு மாகாணத்தில் உரிய சான்றாதாரங்களுடன் உரிமை நிரூபிக்கப்படாத 5 ஆயிரத்து 941 ஏக்கர் காணிகளை அரச காணிகளாக்கிக் கையகப்படுத்தி, சுவீகரிப்பதற்கு வழிசெய்யும் விதத்தில் 28.03.2025 திகதியிடப்பட்டு வெளியான 2430/25 இலக்கமிடப்பட்ட வர்த்தமானியை இடைநிறுத்தி உயர்நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது. 11

## தவிசாளர் தெரிவிலிருந்து நேற்று தேசிய மக்கள் சக்தி வெளிநடப்பு!

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையில்

வவுனியா, ஜூன் 28

வவுனியா தெற்கு தமிழ்பிரதேசசபையின் தவிசாளர் தெரிவுகளின்போது ஜனநாயகம் மீறப்படுவதாக குற்றம்சாட்டி தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் பிரதேச சபையின் முதல் அமர்வில் இருந்து 11

## மோ.சைக்கிளில் இருந்து விழுந்த பெண் சிகிச்சை பலனின்றி சாவு!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜூன் 28

மகனுடன் மோட்டார் சைக்கிளில் சென்ற தாயார் கீழே விழுந்து மயங்கிய நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார். இதன்போது ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்த ஜீவராசா மேரி 11

## போதை மாத்திரைகளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 28

சுன்னாகம், சபாபதிப்பிள்ளை வீதியில் போதை மாத்திரைகளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 23 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்முடனான முரண்பாட்டை வைத்து புனிதமான முயற்சி அசிங்கமாகியது!

## சாடுகின்றார் சீ.வீ.கே.சிவஞானம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

எம்முடனான முரண்பாட்டை வைத்து புனிதமான முயற்சியை அசிங்கப்படுத்திய செயலை கட்சி சார்ந்து கண்டிக்கிறேன். அதுபோன்று சம்பந்தமான விடயங்களை நீதி செய்ய வேண்டிய பொறுப்பை மக்களிடம் கையளிக்கிறேன் என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சமூக ஊடகங்கள் நீதியுடன் நியாயமாக நடக்கவேண்டும். அவர்கள் இடுகின்ற தலைப்புகள் சொந்த வாழ்க்கையில் ஒருவரின் கௌரவத்தைப் பாதிப்பதாக இருக்கக்கூடாது என்பதால் நியாயமாக தலைப்பிட்டுச் செய்தியை வெளியிடுங்கள். எனக்கு மட்டுமில்லை எல்லோருக்கும் இது பொதுவானது.

செம்மணி அணையா விளக்கு போராட்டம் தொடர்பில் இளைஞர்கள் எடுத்த முயற்சி வரவேற்கத்தக்கது என்ற அடிப்படையில் முதன் முதலில் கட்சியின் உள்ளூராட்சி உறுப்பினர்களை பங்கேற்க அழைத்தது நான். அதன் அடிப்படையில் போராட்டத்திலும் பங்கேற்றோம்.

அதன்போது வேலன் சுவாமி விமர்சித்தார். அதில் என்னைப் பேச அழைத்தார்கள். நான் திருப்பி ஏதாவது பேசி இருந்தால் அந்த போராட்டத்தின் நோக்கம் குழம்பிவிடும் என்பதால் அதனை நான் செய்யவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தார். மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் செம்மணி அணையா விளக்கு போராட்டத்துக்கு ஆதரவாக தீப்பந்த போராட்டம் மிக சிறப்பாக நடைபெற்றது. இதனை யாழ்ப்பாண மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் செம்மணி அணையா விளக்கு போராட்டத்துக்கு சென்றபோது அஞ்சலி செலுத்தி மக்களோடு மக்களாக நாங்கள் நின்று இருந்தோம். 15 நிமிடங்களுக்குப் பிறகு அமைதியாக நாங்கள் வெளியேறினோம்.

நான் வெளியேறி வீதியில் சென்று வாகனத்தில் ஏற முற்பட்ட போது சில குரல்கள் எனக்கு எதிராக எழுந்தன. பின்னால் சில பேர் சத்தமிட்டனர். அந்த காணொளியை நான் அவதானித்த பொழுது என்னை குறி வைத்து திட்டமிட்டு பேசியதை அவதானிக்க முடிந்தது.

எமது கட்சிக்கு எதிராக கடந்த பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட காரணத்தினால் மத்திய செயற்குழுவின் தீர்மானத்துக்காக ஒருவரை கட்சியிலிருந்து நீக்கி இருந்தோம். அந்த பழைய குழப்பங்களையே அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

காணொளியை பார்த்தால் தெரியும். நான் சலனம் இல்லாமல் நடந்து சென்றேன். நான் ஓடவில்லை.

தமிழ் அரசுக் கட்சித் தலைவர் விரட்டியடிக்கப்பட்டதாக செய்தி வந்தது. என்னை யாரும் விரட்டியடிக்கவில்லை. அகற்றப்பட்டார் என்ற செய்தி வந்தது. நான் அகற்றப்படவில்லை. எதுவுமே இல்லை. ஏன் இவ்வாறு செய்தியை போட்டார்கள் என்று எனக்கு விளங்கவில்லை. உண்மையை எழுத வேண்டும். எனது பாட்டில் நான் வெளியேறிச் சென்றேன்.

இவ்வாறான செய்திகள் எழுதும் பொழுது அது எம்மை பாதிக்கிறது. உண்மையில் அவ்வாறு நடந்தால் பரவாயில்லை.

நாங்கள் இருந்த இடத்தில் நூறுக்கும் மேற்பட்ட மக்கள் இருந்தார்கள். ஒருவர் கூட எமக்கு எதிராக குரல் எழுப்பவில்லை. நல்ல ஒரு விடயமொன்றுக்கு இலங்கை தமிழ் அரசுக் கட்சி ஆதரவு அளிக்க வேண்டும் என்பதற்காகவே நாம் அங்கு பங்கேற்று இருந்தோம்.

உள்ளூராட்சி தேர்தலில் நிமிர்ந்து நிற்கின்ற கட்சி என்ற வகையில் தமிழ் அரசுக் கட்சிக்கு பொறுப்பு இருக்கிறது. அந்த கடமையை செய்வதற்காக நாம் போய் இருந்தோம்.

காணாமல் போன விடயம் தொடர்பாக நான் பல விடயங்களை செய்திருக்கி றேன். அதை நான் ஒன்றும் சொன்ன தில்லை. 1996 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த விடயங்களை நான் கையாண்டு இருக்கிறேன். கிருசாந்தியின் கொலை நடந்த சமயத்தில் ரஜினி என்ற பெண் பிள்ளையை இராணுவம் கொலை செய்து மலக்குழியில் போட்ட விடயத்தை மிகவும் கடுமையான இராணுவத் தளபதி என்று சொல்லக்கூடிய ஜானக பெரேராவோடு முரண்பட்டு நின்று சடலத்தை மலக்குழியில் இருந்து எடுத்து இரண்டு இராணுவத்தினரை சேவை இடைநிறுத்தம் செய்து வைத்தேன். தயவு செய்து அந்த காலத்தில் பத்திரிகைகளை பார்த்தால் தெரியும். அவ்வாறு பல விடயங்களை செய்து இருக்கிறேன். இதனை பிதற்றிக் கொண்டு நான் திரிவதில்லை.

அந்த இடத்தில் நிற்பதற்கு எனக்கும் கட்சிக்கும் உரிமை இருக்கிறது. அதை தடுப்பதற்கு கட்சியிலிருந்து விலக்கப்பட்டவர்கள் குழுவாக வந்து அந்த இடத்தில் புனித தன்மையும் புனித நோக்கத்தை – சிதைக்கின்ற காழ்ப்புணர்ச்சியான செயல் கண்டிக்கத்தக்கது - என்றார்.

(அ)

# அத்துமீறி செயல்படுகிறது வடக்கு மாகாண இ.போ.ச.!

## செவ்வாயன்று போராட்டத்தில் குதிக்கும் தனியார் பஸ்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 28

இலங்கை போக்குவரத்துச் சபையின் வடக்கு மாகாண சாலைகளில் நடைபெறும் சட்டவிரோத -அத்துமீறிய செயற்பாடுகளை கண்டித்து எதிர்வரும் செவ்வாயன்று வடக்கு மாகாணம் தழுவிய சேவை முடக்கல் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக வடக்கு மாகாண தனியார் போக்குவரத்துச் சேவை சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் நேற்று காலை நடைபெற்ற கால அட்டவணைக்கு முரணான சேவை ஒன்றால் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து யாழ் மத்திய பஸ் நிலையத்தில் தனிதார் மற்றும் இ.போ.ச தரப்பினரிடையே குழப்ப நிலை ஒன்று ஏற்பட்டது.

இதையடுத்து சில நிமிடங்கள் வாகன நெரிசல் ஏற்பட்டதை அடுத்து பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை சுமுகமாக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த சம்பவம் குறித்து கருத்துக் கூறிய வடக்கு மாகாண தனியார் போக்குவரத்து சேவை சங்க தலைவர் -

இன்று (நேற்று) காலை யாழ் மத்திய பஸ் நிலையத்தில் இருந்து கிளிநொச்சி சாலைக்கு சொந்தமான பஸ் ஒன்றுகுறித்த சாலை முகாமையாளரின் உத்தரவுக்கமைய சட்டவிரோத சேவையை வவுனியா நோக்கி முன்னெடுக்க முயன்றது.

இதை அவதானித்த நாம் குறித்த சட்டவிரோத செயற்பாட்டை கண்டித்து அதை நிறுத்துமாறு வலியுறுத்தினோம். ஆனால் இ.போ.சவினர் அடாத்தாக சேவையை முன்னெடுக்க முயன்றனர்.

ஏற்கனவே இச்சட்டவிரோதம் குறித்து துறை சார் தரப்பினருக்கும் போக்குவரத்து அதிகார சபை, துறைசார் அமைச்சு, வடக்கின் ஆளுநர் ஆகியோரிடம் முறையிட்டிருந்ததுடன் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்துள்ளோம்.

ஆனாலும் இதுவரை எந்தவொரு தீர்வும் கிடைக்காத நிலையே காணப்படுகின்றது. அத்துடன் இ.போ.ச அடாத்தாக சட்டத்துக்கு முரணாகச் செயற்படுவதுடன் தனியார் போக்குவரத்துச் சேவையை முடக்கவும் முயன்று விபத்துக்கள் ஏற்படுவதற்கும், முரண்பாடுகளை உருவாகுவதற் கும் வலிந்து இழுக்கின்றனர்.

எனவே இவ்வாறான இலங்கை போக்குவரத் துச் சபையின் வடக்கு மாகாண சாலைகளில் நடைபெறும் சட்டவிரோத - அத்துமீறிய செயற் பாடுகளை கண்டித்தும், அவ்வாறான செயற்பாடு களை நிறுத்தி தனியார் பஸ்களின் பாதுகாப்பான சேவையை உறுதி செய்வதற்காகவும் எதிர் வரும் செவ்வாயன்று வடக்கு மகாணம் தழுவிய ரீதியில் முழுமையான சேவை முடக்கல் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம் - என்றார்.(அ)

# யாழில் ஆசிரியரின் சங்கிலியை அறுத்த சந்தேக நபர் கைதானார்!

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்ப்பாணத்தில் பெண் ஆசிரியர் ஒருவரது ஒரு பவுண் தங்கச் சங்கிலியை அறுத்த சந்தேக நபர் ஒருவர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏழாலை மகா வித்தியாலயத்தில் கடமை புரியும் குறித்த ஆசிரியர் நேற்று முன்தினம் பாடசாலையில் இருந்து வரும் போது மருதனார்மடம் பகுதியில் வைத்து முகத்தை மூடி துணி கட்டியிருந்த நபர் ஒருவர் அவரது தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளார்.

பாதிக்கப்பட்ட ஆசிரியர் இது குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். விசாரணைகளை மேற் கொண்ட சுன்னாகம் பொலிஸார் நேற்று முன்தினமே 26 வயதுடைய குறித்த சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர் ஹெரோயினுடன் கைதாகி 8 மாதங்கள் சிறைவாசம் அனுபவித்த பின்னர் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னரே விடுதலையாகி வந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-05)

# யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு எதிராக வலி.மேற்கு பிரதேச சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்ப்பாணம் மாநகர சபையின் கல்லூண்டாய் வெளியில் அமைந்துள்ள குப்பைமேடு, தொடர்ச்சியாக எரியூட்டப்படுவது தொடர்பில், வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குப்பைகள் எரியூட்டப்படுவதனால், வலிகாமம் மேற்கு பிரதேச மக்கள், சுகாதார ரீதியில் பாதிக்கப்படுவதை சுட்டிக்காட்டி, வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால், யாழ்ப்பாணம் மாநகர சபையின் குறித்த செயற்பாட்டுக்கு எதிராக கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் கூட்டம், தவிசாளர் சண்முகநாதன் ஜயந்தன் தலைமையில் இடம்பெற்றதுடன் திண்மக்கழிவு விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன் போது, தவிசாளர் கருத்து வெளியிட்டார்.

கல்லூண்டாய் வெளி குப்பை மேடு தொடர்ச்சியாக எரியூட்டப்படுவதால் பிரதேச மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

யாழ்ப்பாணத்திற்கு செல்லும் பிரதான வீதியில், பலர் சுகாதார ரீதியாக பாதிக்கப்படுகின்றனர்.

அராலி போன்ற பிரதேசங்கள், சுற்றாடல் பாதிப்புக்கு உள்ளாகும் சூழலும் காணப்படுகிறது.

மாநகர சபைக்கு கண்டனங்களையும், இது குறித்து எதிர்ப்புகளையும் தெரிவித்து, எதிர்வரும் காலங்களில், எமது பிரதேச மக்களின் நலனை கருத்திற் கொண்டு, இதனை தடுத்து நிறுத்த தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்கு அனுப்புமாறு, சபையிடம் தீர்மானத்தை முன்வைக்கின்றேன்.

என வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் ச.ஜயந்தன் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# வடக்கில் காணி விடுவிப்பின் போது....

நேர்காணலின்போது, வடக்கு, கிழக்கு காணி விடுவிப்பு சம்பந்தமாக எழுப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர் மேலும் கூறியவை வருமாறு-

வடக்கு, கிழக்கில் புலிகளின் மனோ நிலையில் வாழும் சிலரும் இருக்கவே செய்கின்றனர்.

புலிகளின் நிகழ்ச்சி நிரல் குறித்து கனவு காணும் தரப்பினரும் உள்ளனர். அனைத்து மக்களும் அல்லர். ஒரு 7 ஆயிரம் முதல் 8 ஆயிரம் வரையானோர் அவ்வாறு இருக்கலாம்.

அதேபோல புலிகளை ஆசீர்வதித்த அரசியல் வாதிகள் உள்ளனர். புலிகளை மீள் எழுச்சி பெற வைப்பதற்கு முற்படும் டயஸ்போரா குழுவொன்றும் உள்ளது.

இப்படியான அச்சுறுத்தல் இருப்பதால், போர் மூண்ட பிறகு முகாம்கள் அமைப்பது பற்றி சிந்திக்காமல், தூர நோக்கு சிந்தனை அடிப்படையிலேயே முடிவுகள் எடுக்கப்படும். பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் முகாம்கள் இருக்கவேண்டும். அதற்காக போர் காலத்தில் இருந்ததுபோல் அல்ல. பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படாத வகையில் நகர்வுகள் இடம்பெறவேண்டும்.

யாழில் உள்ள பாதுகாப்பை பல வீனப்படுத்தினால் அது யாழ். மக்களுக்கு தான் சரி இல்லை. ஆவா என்ற பாதாள குழுவொன்று இருந்தது. கேரள கஞ்சாக் கள் வருகின்றன. வீதித் தடைகளை நீக்கினால் தெற்கிலுள்ள பாதாளக் குழுக்கள் வடக்குக்கு சென்று ஒளியக் கூடும். எனவே, பாதுகாப்பு நெறி முறைகள் அவசியம்.

சிங்கப்பூர் மற்றும் சுவிட்சர்லாந்தில் இருக்கும் நிலை இங்கு இல்லை. எனவே, பாதுகாப்பை உறுதி செய்யப்பட வேண்டும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
28.06.2025 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 14

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## இறுதியில் ஐ.நா வந்து சேந்திருக்கும் இடம்?

ஐக்கிய நாடுகள் சபைக்கான மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டர்க் பல்வேறு தரப்புக்களையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இதன் தொடர்சியாக இலங்கையின் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை சந்தித்திருந்தார். இதன்போது, தான் சர்வ தேச தரத்துடனான உள்ளக பொறிமுறையை வலியுறுத்தியுள்ளதாக குறிப்பிட்டிருக்கின்றார்.

ஆனால், ஆணையாளருடனான சந்திப்பில் ஈடுபட்டிருந்த தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் சமூக பிரதிநிதிகள் என்போர் தங்களுக்கு உள்ளக பொறிமுறையில் நம்பிக்கையில்லை. எனவே சர்வதேச விசாரணைக்கு மனித உரிமைகள் பேரவை அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால், ஆணையாளரோ அரசாங்கத்திடம் உள்ளக பொறிமுறையை வலியுறுத்தியிருந்தார் என குறிப்பிட்டிருப்பதானது எதனை உணர்த்துகின்றது? இதிலிருந்து தமிழ் தரப்புகள் எதனை கற்றுக்கொள்ளப் போகின்றன?

'ஈழநாடு' தொடர்ந்து எவ்வாறான உண்மைகளை மக்களுக்குச் சொல்லி வருகின்றதோ, அவைகள் நமக்கு முன்னால் நடந்த வண்ணமேயிருக்கின்றன. இன்றைய உலக அரசியல் சூழலில் நாடுகளுக்கிடையிலான ஒரேயொரு சர்வதேச இணைப்பு நிறுவனமான ஐக்கிய நாடுகள் சபையானது அனைத்து நாடுகளையும் சமனாக நடத்துவதில் பின்னடைவுகளை சந்தித்து வருகின்றது. இவ்வாறான பின்புலத்தில் ஏற்கனவே குடியரசு கட்சியின் அமெரிக்க நிர்வாகம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தொடர்பில் கடுமையான விமர்சனங்களை கொண்டிருக்கின்றது.

அதே வேளை மனித உரிமைகள் பேரவையின் மீதான அவநம்பிக்கையையும் வெளியிட்டுவருகின்றது. இஸ்ரேல் தொடர்பான பேரவையின் தீர்மானங்களே இதற்கான அடிப்படையான காரணமாகும். இந்த இடத்தில் ஆணையாளர் என்பவர் யார் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். ஆணையாளர் தனது பரிந்துரைகளை முன்வைக்கலாம். ஆனால், அவரால் அதற்கு மேல் உறுப்பு நாடுகள் மீது எந்தவோர் அழுத்தத்தையும் பிரயோகிக்க முடியாது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் இறுதியில் இலங்கை அரசாங்கம் எதனை கூறிவருகின்றதோ, அதனையே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரும் ஏற்றுக் கொண்டிருக்கின்றார். இதன்மூலம் பாதிக்கப்பட்ட தரப்புகளின் கோரிக்கைகளுக்கு சார்பாக அவரால் இருக்க முடியவில்லை. அவர் விரும்பினாலும் இருக்க முடியாது.

இஸ்ரேல் - ஈரான் மோதலின் போது ஐக்கிய நாடுகள் சபையால் காத்திரமான தலையீடுகள் எதனையும் செய்ய முடியவில்லை. ஈரான் மீது அமெரிக்கா திடீரென்று தாக்குதலை மேற்கொண்டது. இந்தப் பின்புலத்தில் ஒரு நாடு தான் பாதிப்படுவதாக கருதினால் யாரிடம் முறையிடுவது? உண்மையில் ஐக்கிய நாடுகள் சபையிடம்தான் முறையிட வேண்டும். ஆனால், ஐக்கிய நாடுகள் சபையோ கையறு நிலையில் இருக்கின்றது. இன்று காஸாவில், யுத்தத்தின் காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் இறந்திருக்கின்றனர். ஆனாலும் யுத்தத்தை தடுத்து நிறுத்துவதிலும் இரு தரப்பையும் ஓரிடத்திற்கு கொண்டுவருவதிலும் ஐக்கிய நாடுகள் சபையினால் எதனையும் செய்ய முடியவில்லை. இதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் இஸ்ரேலுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பிரேரணைகளே பிரதான காரணம்.

இஸ்ரேல், மனித உரிமைகள் பேரவையை ஒரு பக்கசார்பான அமைப்பாகவே கருதுகின்றது. இதன் காரணமாகவே ஐக்கிய நாடுகள் சபையை இஸ்ரேல் பொருட்படுத்தவில்லை. இந்தப் பின்புலத்தில் நேக்கினால் இலங்கை விடயத்தில் சர்வதேச விசாரணைக்கு ஐக்கிய நாடுகள் சபை உதவுமென்று எவரேனும் நம்பினால், அவ்வாறானவர்கள் உலக அரசியலில் அறிவிலிகளாகவே இருக்க முடியும். பாதிப்பை தந்தவரே எவ்வாறு விசாரணையை மேற்கொள்ள முடியும் என்பது நியாயமான கேள்வியாக இருந்தாலும் கூட அந்த நியாயமான கேள்விக்கான பதிலை யாரிடம் கேட்பது?

# சின்ன வெங்காய இறக்குமதியை உடனே மட்டுப்படுத்தவேண்டும்!

## யாழ். வெங்காய உற்பத்தியாளர்கள் மகஜர்

யாழ்ப்பாணம், ஜூன் 28

நாட்டில் சின்ன வெங்காயத்தின் இறக்குமதியை குறைக்குமாறு வலியுறுத்தி, அச்சுவேலி - பத்தமேனி வெங்காய உற்பத்தியாளர்கள் யாழ். மாவட்ட செயலகத்தில் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

சின்ன வெங்காயச் செய்கையில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வரும் அச்சுவேலி - பத்தமேனி வெங்காய சங்கத்தைச் சேர்ந்த விவசாயிகள் தம்மால் உற்பத்தி செய்யப்படும் சின்ன வெங்காயத்திற்கு நிர்ணயமான போதிய விலை கிடைக்காமையால் தாம் பாதிப்படைந்துள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சின்ன வெங்காயத்தினை உற்பத்தி செய்து சந்தைப் படுத்துவது வரையிலான காலப் பகுதியில் அதுகளவான செலவினங்கள் தமக்கு ஏற்படுவதால் அதனை நிர்ணய விலைக்கு விற்க முடியவில்லை என்றும் அரசாங்கத்தினால் வெளிநாட்டில் இருந்து சின்ன வெங்காய இறக்குமதி செய்யப்படும் நிலை அதிகரித்துள்ளமையால் தமது உற்பத்திக்கான நிர்ணயவிலை கிடைக்கவில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இதனால் அரசாங்கம் வெங்காய இறக்குமதியை மட்டுப்படுத்தி, தமக்கான நிர்ணய விலையை கிடைக்கச் செய்ய உதவுமாறு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிறிமோகனிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர். (அ)

# மன்னார் நகர சபையில் பெரும் வளப்பற்றாக்குறை

## நகர முதல்வர் டானியல் வசந்தன்

மன்னார், ஜூன் 28

மன்னார் நகர சபை பிரிவில், பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய தேவை இருப்பதாகவும், ஆனால், வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வளப்பற்றாக்குறை தடையாக இருப்பதாகவும், அதனால்,மன்னார் நகர சபைக்கு தேவையான வளங்களை பெற்றுக்கொடுக்க, மத்திய அரசு முன்வர வேண்டும் எனவும் மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று மன்னார் நகர சபையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (அ)

# திருடப்பட்ட மோட்டர்களுடன் இரண்டு சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 28

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளிலும் திருடப்பட்ட 4 மோட்டர்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாடசாலை, ஆலயம், வீடு என மூன்று இடங்களில், நீர் இறைக்கும் மோட்டர்கள் திருடப்பட்டுள்ளதாக, உரிமையாளர்களால் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதற்கமைய நேற்று காலை, சரசாலை, மட்டுவில் பகுதியை சேர்ந்த 23 வயதான இரண்டு சந்தேக நபர்களை கைது செய்த பொலிஸார், சரசாலை காட்டுப் பகுதி யில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 4 மோட்டர்களையும் மீட்டனர்.

(அ)

# ஒரு வார சுற்றிவளைப்பில் 3,387 பேர் கைதாகினர்!


கொழும்பு, ஜூன் 28

நாடளாவிய ரீதியில் கடந்த 20 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை பொலிஸாரின் விசேட நடவடிக்கையில் 3 ஆயிரத்து 387 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், ஹெரோயினுடன் ஆயிரத்து 30 பேரும் ஐஸ் போதைப்பொருளுடன் ஆயிரத்து 189 பேரும் கஞ்சாவுடன் ஆயிரத்து 58 பேரும், குஷ் போதைப்பொருளுடன் 35 பேரும் கஞ்சா செடிகளுடன் 32 பேரும் போதை மாத்திரைகளுடன் 38 பேரும் சட்டவிரோத சிக ரட்களுடன் 5 பேரும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**இடபம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு கூடும். தைரியம் கூடும்.

**மிதுனம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாகவாங்கியிருந்தபணத்தைதிருப்பித்தருவீர்கள். புது நட்பு மலரும். பழைய சிக்கலில் ஒன்று தீரும். மரியாதைக் கூடும். தடைகள் உடைபடும் நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். இடம். பொருள், ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். வியாபாரத்தில் தேவையற்ற வீண் இழப்புகள் ஏற்படும். மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கன்னி**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் உண்டு. உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும்.

**துலாம்**
தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். வேலையாட்களிடம் வளைந்து கொடுத் துப் போவது நல்லது. நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

**மகரம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். தாய் வழியில் ஆதரவுப் பெருகும். சக ஊழியர்கள் உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கும்பம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். முன்வைத்த கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள். அமோகமான நாள்.

**மீனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற் கொள்வீர்கள். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் இருந்த பிரச்னைகள் விலகும். கனவு நனவாகும்.

# யாழ்ப்பாணம் பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்ப்பாணம் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கிராமிய வறுமையை இல்லாதொழித்தல், தூய்மையான இலங்கையை உருவாக்குதல் மற்றும் தரவுகளை கணனி மயப்படுத்தல் தொடர்பான நோக்கங்கள் தெளிவுபடுத்தப்பட்டு யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் முதலாவது ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் எதிர்காலத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டிய அபிவிருத்தி விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன. அத்துடன் மீன்பிடி, சுகாதாரம், கல்வி உள்ளிட்ட துறைசார் விடயங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டன.


இதில், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீபவானந்தராஜா, யாழ். மாநகர சபையின் பிரதி முதல்வர், திணைக்கள உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (எ)

# மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கி வைப்பு

வவுனியா, ஜூன் 28


வவுனியா மத்தியஸ்த சபைக்கு புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள தவிசாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பிரதேச செயலாளர் இ. பிரதாபன் கலந்து கொண்டு புதிதாக தெரிவு செய்யப்பட்ட மத்தியஸ்தர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கினார். புதிய தவிசாளராக திருமதி நந்தகுமார் சசிகலா நியமிக்கப்பட்டார். (எ-10)



# அதிகரிக்கும் காணிப் பிணக்குகள்

## வவுனியா பிரதேச செயலாளர் தெரிவிப்பு



வவுனியா, ஜூன் 28

வவுனியா பிரதேச செயலக மத்தியஸ்த சபைக்கு அதிகளவான பிணக்குகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் சரியான ஆலோசனை மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டே மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் வவுனியா பிரதேச செயலாளர் இ. பிரதாபன் தெரிவித்தார்.

அத்துடன், காணி தொடர்பான பிணக்குகளே அதிகமாக காணப்படுவதாகவும் காணி தொடர்பான ஆவணங்கள் சரியாக காணப்படாமையால் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் அதிகளவான பிணக்குகள் தற்போது கிடைப்பதாகவும் கூறினார்.

மேலும், நீதிமன்றம் செல்ல முன்னர் மத்தியஸ்த சபை செயல்பாட்டை மக்கள் நாடுவதால் நடுநிலைமை மாறாத தன்மையைப் பேண வேண்டும் எனவும், அவர்களுக்கான நியாயமானதும் நீதியானதுமான அவர்கள் நலன் சார்ந்த விடயங்களை கவனத்தில் கொண்டு இணக்கம் வழங்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உரியது எனவும் தெரிவித்தார். பொருளாதார வலுவிழந்தவர்களையும் அவர்கள் தன்மையை விடுத்து விடயத்தை சரியான முறையில் அணுக வேண்டும் எனவும் தெரிவித்ததுடன், மத்தியஸ்த சபை நியமனங்களை பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர்களுக்கு தனது வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வவுனியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில் மத்தியஸ்த சபை தவிசாளர் மற்றும் உப தவிசாளர் உட்பட 16 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. (எ-10)

மீள்குடியேற்ற அமைச்சின்

# 50 சதவீதத்துக்கும் மேலான நிதி யாழ். மாவட்டத்துக்கு ஒதுக்கீடு!

யாழ்ப்பாணம், ஜூன் 28

மீள்குடியேற்ற மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கே 50 சதவீதத்துக்கு மேலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மீள்குடியேற்ற அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்கு தலைமை தாங்கி உரையாற்றிய அரசாங்க அதிபர், மீள்குடியேற்ற மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கே 50 சதவீதத்துக்கு மேலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதனால், இவ் வாண்டு இறுதிக்குள் வேலைத் திட்டங்களை நிதி திரும்பாதவகையில் பூர்த்தி செய்ய வேண்டும். மேலும், மழை காலத்துக்கு முன்னராக வீடமைப்பு நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்ய வேண்டும். வீதிப் புனரமைப்பு, மின்சார இணைப்பு மற்றும் குடிநீர் விநியோக இணைப்பு போன்ற திட்டங்களின் முன்னேற்றங்களை ஆராய்ந்து உரிய அறிவுறுத்தல்களை வழங்கியதுடன் அடுத்த முன்னேற்றக் கூட்டத்தை எதிர்வரும் யூலை மாதம் 31 ஆம் திகதி நடத்த ஒழுங்கு செய்யுமாறும் அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டார். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆளும் கட்சியின் பிரதேச சபை உறுப்பினரகள் கடத்தப்பட்டனர்!

## வெலிகமவில் பதற்ற நிலைமை

கொழும்பு, ஜூன் 28

**மாத்தறை - வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் தெரிவுக்காக வாக்களிக்கச் சென்ற தேசிய மக்கள் சக்தி கட்சியின் உறுப்பினர்கள் இருவர் கடத் தப்பட்டனர் என்று தெரிய வருகிறது.**

பிரதேச சபை கூட்டத்துக்கு இருவரும் சென்று கொண்டிருந்தபோதே கடத்தப்பட்டனர் என்று ஜே. வி. பியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனால், சபை அமர்வை நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டதாகவும், கடத்தப்பட்ட உறுப்பினர் கள் இருவரும் மீண்டும் அழைத்து வரப்பட்டால் மட் டுமே சபை நடவடிக்கைகளை தொடங்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

45 உறுப்பினர்களை கொண்ட வெலிகம பிரதேச சபைக்கு கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியிலிருந்து 22 உறுப்பி னர்கள் தெரிவாகியிருந்தனர். ஏனைய கட்சிகள் 23 உறுப்பினர்களை பெற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சைக்கிளுடன் வாய்க்காலில் விழுந்தவர் பலி

கொழும்பு, ஜூன் 28

சைக்கிளுடன் வாய்க்காலில் விழுந்தவர் படுகாயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்தார்.

அநுராதபுரம், தம்மண்ணகுளம் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 42 வயது நபரே உயிரழந்தார்.

சைக்கிளில் அவர் வேகமாக பயணித்த நிலையில் கட்டுப்பாடு இழந்து வாய்க்காலில் விழுந்துள்ளார்.

இதில் அவர் படுகாயங்களுக்கு உள்ளானார். மீட்கப்பட்ட அவர் அநுராதபுரம் போதனா மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டார். எனினும், அவர் அங்கு உயிரிழந்தார். (ஐ)

# இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய குழு உறுப்பினர் பதவிக்கு விண்ணப்பம்

கொழும்பு, ஜூன் 28

இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய பணிமனை உறுப்பினர் பதவியில் தற்போதுள்ள வெற்றிடம் மற்றும் ஏற்படவுள்ள வெற்றிடங்களையும் நிரப்பும் பொருட்டு தகைமையுடைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் இலங்கைப் பாராளுமன்றத்தின் **www.parliament.lk** என்ற இணையத்தளத்தில் கிடைக்கக்கூடிய இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய பணிமனைக்கு உறுப்பினர்களை நியமித்தல்' எனும் இணைப்பிலுள்ள விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டு 2025 ஜீலை 11 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்படவேண்டும்.

விண்ணப்பங்களை, அரசியலமைப்புப் பேரவைக்கான பதில் செயலாளர் நாயகம், அரசியலமைப்புப் பேரவை அலுவலகம், இலங்கைப் பாராளுமன்றம், சிறீ ஜெயவர்த்தனபுர கோட்டை எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது **constitutionalcou ncil@parliament.lk** இற்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்க வேண்டும்.

கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயமாக 'இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்திற்கு உறுப்பினர்களை நியமித்தல்' எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். (ஐ)

# அப்புத்தளையில் சுற்றுலா வலயம்!


கொழும்பு, ஜூன் 28

உலகளவில் அங்கீகாரம் பெற்ற "சிலோன் ரீ" (இலங்கை தேயிலை) வர்த்தக நாமத்தினூடாக இலங்கை மீது சர்வதேச ஆர்வத்தை அதிகரிக்கும் நோக்கில், அப்புத்தளையில் ஒரு புதிய சுற்றுலா வலயத்தை உருவாக்குவதற்கான திட்டங்களை ஊவா மாகாண சபை முன்மொழிந்துள்ளது.

அதன்படி, இந்த சுற்றுலா வலயம் அப்புத்தளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பங்கெட்டிய கிராம அலுவலர் பிரிவின் கஹகல்ல பகுதியில் சுமார் 4 ஏக்கர் பயன்படுத்தப்படாத புல்வெளி நிலப்பரப்பில் அமையவுள்ளது.

இந்த கஹகல்ல சுற்றுலா வலயத்தில் தேயிலை பாரம்பரிய அருங்காட்சியகம் மற்றும் தாவரவியல் பூங்கா என்பன அமையவுள்ளன. (ஐ)

# ஜே. வி. பி. கட்சியினரை சந்தித்த ஐ. நா. மனித உரிமை ஆணையர்!



கொழும்பு, ஜூன் 28

இலங்கைக்கு வருகை தந்த ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே. வி. பி.) பொதுச் செயலாளர் டில்வின் சில்வா உள்ளிட்ட குழுவினரை சந்தித்தார்.

இந்த சந்திப்பு மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை பணிமனையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மனித உரிமைகள் மற்றும் நிர்வாகத்தை பாதுகாப்பதில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முன்னேற்றம் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் தனது மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் திருத்தம், மனித உரிமைகளைப் பாதுகாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விசாரணையில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டதாகவும் கூறப்பட்டது. (ஐ)

# மு. காவின் தேசிய பட்டியல் எம். பியாக அப்துல் வாஸித்

கொழும்பு, ஜூன் 28

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய பட்டியல் பாராளுமன்ற ஆசன வெற்றிடத்துக்கு அப்துல் வாஸித்தை நியமிக்க அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது.

இந்தத் தீர்மானம் விரைவில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்படும் என்று அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாக, கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஏறாவூர் நகர சபைக்காக போட்டியிடுவதற்காக சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் சாலி நளீம் கடந்த மார்ச் 14 ஆம் திகதி தமது பதவியிலிருந்து விலகினார்.

இதையடுத்து, அந்தப் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டது. இதையடுத்தே அந்த இடத்துக்கு பொத்துவில் நகர சபையின் முன்னாள் தவிசாளரான அப்துல் வாஸித் நியமிக்கப்படவுள்ளார்.

ஜெயவர்த்தனபுர பல்கலை. விவகாரம்

# வெளிவாரி பட்டப் படிப்பு நடவடிக்கை இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூன் 28

ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் வெளிவாரி பட்டப் படிப்புகள், விரிவாக்க பாடநெறிகள் பிரிவின் அனைத்து கல்வி நடவடிக்கைகளும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அறிக்கைகளின்படி, கடந்த செவ்வாய்க்கிழமை முதல் விரிவாக்க பாடநெறிகள் பிரிவில் நடைபெறும் அனைத்து கல்வி நடவடிக்கைகளும் இடைநிறுத் தப்பட்டுள்ளன.

இதுகுறித்து கருத்து தெரிவித்த பல்கலைக்கழகத்தின்




மூத்த விரிவுரையாளர் தம்பர அமில தேரர் பல்கலைக்கழகத்தில் நிலவும் பிரச்னைகளை தீர்த்த பின்னர் விரைவில் கல்வி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்க நம்பிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ)

# ஷிராந்தியின் சகோதரர் கைது

கொழும்பு, ஜூன் 28

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிராந்தி ராஜபக்ஷவின் மனைவியின் சகோதரரும் சிறீலங்கன் எயார்லைன்ஸின் முன்னாள் தலைவருமான நிஷாந்த விக்ரமசிங்க கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்று வெள்ளிக்கிழமை இலஞ்சம் மற்றும் ஊழல்கள் தடுப்பு ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# நாமலுக்கு எதிரான வழக்கு செப்ரெம்பரில் விசாரணை

கொழும்பு, ஜூன் 28

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரணைக்காக செப்ரெம்பர் 26 ஆம் திகதி மீண்டும் அழைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

ரக்பி விளையாட்டை ஊக்குவிப்பதாகக் கூறி இந்திய நிறுவனமான கிரிஷிடமிருந்து 7 கோடி ரூபாயைப் பெற்று நம்பிக்கை மோசடி செய்ததாகக் கூறி நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக இந்த வழக்கு தொடரப்பட்டது.

வழக்கு நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது பிரதிவாதியான நாமல் ராஜபக்ஷ நீதிமன்றத்தில் முற்பட்டிருந்தார். (ஐ)

# அநுராதபுரம் மருத்துவமனையின் மல கழிவுகள் மல்வத்து ஓயாவில்!

கொழும்பு, ஜூன் 28

அநுராதபுரம் போதனா மருத்துவமனையிலிருந்து வெளியேற்றப்படும் மலம் மற்றும் கழிவுநீர் என்பன மல்வத்து ஓயாவில் கலப்பதால் சுகாதார பிரச்னைகள் உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமையால், சுவபா உயனைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் கடுமையான துர்நாற்றம் வீசுவதாகவும் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இந்த கழிவுநீர் மல்வத்து ஓயாவில் கலப்பதால், அங்கு குளிக்கும் பிரதேசவாசிகளுடன் சுற்றுலா பயணிகளுக்கும் சுகாதார பிரச்னைகள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தப் பிரச்னையை தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பெண்ணின் கால்களை காணொலி எடுத்தவருக்கு ஒத்திவைத்த சிறை!

கொழும்பு, ஜூன் 28

பேருந்தில் பயணித்த இளம் பெண்ணின் கால்களை கைபேசி மூலம் காணொலி எடுத்த இளைஞருக்கு 20 வருடங்களுக்கு ஒத்திவைத்த 2 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம்

அத்துடன், குற்றவாளிக்கு ஆயிரத்து 500 ரூபாய் அபராதமும் பாதிக்கப்பட்டவருக்கு 50 ஆயிரம் ரூபாய் நட்டஈடும் வழங்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெக்குனவெல உத்தரவிட்டார்.

பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு வழங்கப்படாவிட்டால், குற்ற 6 மாத சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த வருடம் கொழும்பு - பொரளையில் இடம்பெற்ற சம்பவத்திலேயே நேற்றைய தினம் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மின்சார சபை சட்ட திருத்தம்:*

# ஆசிய அபிவிருத்தி, உலக வங்கிகளுக்கு மின்சக்தி அமைச்சர் பதிலளிக்கவில்லை

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 28

**மின்சார சபை சட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்கள் தொடர்பில் ஆசிய அபி விருத்தி வங்கி, உலக வங்கி என் பவை வலுசக்தி அமைச்சருக்கு கடிதம் அனுப்பியுள்ளன.**

ஆனால், அமைச்சரால் அந்த கடிதத்துக்கு இதுவரையில் பதிலளிக்கப்படவில்லை. பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகாரத்தை வலுவிழக்கச் செய்யும் வகையிலான தீர்மானங்களை நடைமுறைப்படுத்த வேண்டாம் என்று அந்த கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி பணிமனையில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

உலக வங்கி, ஜைக்கா நிறுவனம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன இணைந்து வலுசக்தி அமைச்சிற்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளன. பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கும் அந்த கடிதத்தின் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. 2024இல் நிறைவேற்றப்பட்ட மின்சார சபை சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகள் தொடர்பில் 4 விடயங்கள் அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அதற்கமைய இதன் ஊடாக பொருளாதாரம் முன்னேற்றமடைவதற்கு பதிலாக பின்னோக்கியே செல்லும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மின்சார துறையின் அனைத்து உரித்துக்களும் அரசாங்கத்திடமே இருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதன் அடிப்படை என்ன என கேட்கப்பட்டுள்ளது. மகாவலி நீர் மின் உற்பத்தி, நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி என்பவற்றோடு மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உள்ளிட்ட அனைத்தும் அரசாங்கத்திடமே காணப்பட்டது. 2024 சட்டத்தின் ஊடாக இவை தொகுதிகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன. அரசாங்கம் எதற்காக இதில் மாற்றங்களை ஏற்படுத்த எண்ணுகின்றது என்பதே அவற்றின் கேள்வியாக உள்ளது -என்றார்.

# மலையக ரயில் சேவை நேற்று பாதிக்கப்பட்டது

கொழும்பு, ஜூன் 28

தெமோதர - எல்ல ரயில் நிலையங்களுக்கு இடையில் உள்ள ரயில் பாதையில் மரங்கள் முறிந்து விழுந்ததில் மலையக ரயில் சேவைகள் நேற்று வெள்ளிக்கிழமை பாதிக்கப்பட்டன என்று புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது.

எல்ல வனப்பகுதியில் ஏற்பட்ட தீ பரவல் காரணமாகவே இந்த மரங்கள் முறிந்து ரயில் பாதைகளில் விழுந்தன.

இதனால், நேற்று காலை 5.45 மணிக்கு பதுளையிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிப் புறப்பட்ட உடரட்ட மெனிகே ரயில் சேவையும் பாதிக்கப்பட்டுள்ளது.

விழுந்த மரங்களை வெட்டியகற்றும் பணி தொடர்கிறது. இது நிறைவடைந்ததும் ரயில் சேவைகள் வழமைக்கு திரும்பும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# போதைப்பொருளுடன் இந்திய பிரஜை கைது!

கொழும்பு, ஜூன் 28

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் குஷ் போதைப் பொருளுடன் இந்திய பிரஜை ஒருவர் விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

38 வயதான சந்தேகநபர் நேற்று முன்தினம் இரவு சென்னை விமான நிலையத்திலிருந்து கட்டுநாயக்காவுக்கு வருகை தந்துள்ளார்.

சுங்க அதிகாரிகளின் சோதனையில் அவரின் பயணப்பொதியில் இருந்து 2 கிலோ 130 கிராம் குஷ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது. இதன் சந்தை மதிப்பு சுமார் 2 கோடியே 13 இலட்சம் ரூபாயாகும்.

கைதான சந்தேகநபர் சான்று பொருட்களுடன் சட்ட நடவடிக்கைக்காக கட்டுநாயக்கா விமான நிலைய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

(ஐ)

# அமெரிக்காவை கண்டிக்கும் தற்துணிவு அரசிடம் இல்லை!

## விமல் வீரவன்ஸ கூறுகிறார்



கொழும்பு, ஜூன் 28

உலகுக்கு மனித உரிமைகள், ஜனநாயகம் பற்றி போதனை செய்யும் அமெரிக்கா இஸ்ரேலின் ஜனநாயக விரோத செயல்பாட்டுக்கு துணைபோகுகிறது. அமெரிக்காவின் முறையற்ற செயல்பாட்டை கண்டிக்கும் தற்துணிவு அரசாங்கத்துக்கு கிடையாது. அரசாங்கத்தின் வெளிவிவகார கொள்கை மலினப்படுத்தப்பட்டுள்ளது - என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் தனது கட்சி பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

துறைமுகத்தில் கொள்கலன் நெரிசல் திட்டமிட்ட வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடந்த ஜனவரி மாதம் திடீரென கொள்கலன் நெரிசல் ஏற்படுத்தப்பட்டது. இந்த நெரிசலுக்கு மத்தியில் சிவப்பு முத்திரை பதிக்கப்பட்ட 200 கொள்கலன்களுடன் 323 கொள்கலன்கள் எவ்விதமான பரிசோதனைகளுமின்றி விடுவிக்கப்பட்டன. பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் காணப்படுகின்ற நிலையில், அரசாங்கம் இதுவரையில் உண்மையை பகிரங்கப்படுத்தவில்லை என்றும் அவர் சாடினார்.

(ஐ)

# துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் படுகாயம்!

கொழும்பு, ஜூன் 28

அநுராதபுரத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 29 வயது நபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

அநுராதபுரம் - கல்குலம பகுதியில் கடந்த புதன்கிழமை இந்தத் துப்பாக்கிச்சூடு இடம் பெற்றுள்ளது.

இதில், சியம்பலகஸ்வெவ பகுதியை சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையே படுகாயமடைந்தார்.

சூட்டுக் காயத்துடன் அந்தப் பகுதியிலிருந்த எரிபொருள் நிலையத்தை ஓடி வந்தவர், அங்கே மயங்கி விழுந்துள்ளார்.

பின்னர், அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பாதிக்கப்பட்டவர் ஆபத்தான நிலையில் உள்ளார்.

துப்பாக்கிச்சூட்டுக்கான காரணம் தெரிய வரவில்லை. அநுராதபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கட்டடத்திலிருந்து ஆண் சடலமாக மீட்பு!

கொழும்பு, ஜூன் 28

கம்பஹாவில் சீதுவை நகரத் துக்கு அருகே கைவிடப்பட்ட கட்டடம் ஒன்றிலிருந்து சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மீட்கப்பட்ட இந்த சடலத்துக்கு உரி யவர் அடையாளம் காணப்ப டவில்லை. 50 -55 வயதுக்கு உட்பட்ட ஆணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

மீட்கப்பட்ட சடலம் நீர்கொழும்பு மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை சீதுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# துறைமுக நகரின் செயற்கை கடலில் மாணவன் மாயம்!

கொழும்பு, ஜூன் 28

கொழும்பு துறைமுக நகரத்தின் செயற்கை கடலில் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் காணாமல் போயுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

கொழும்பு, மொறட்டுவை பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் குழு ஒன்று ஸ்நோர் கெலிங், கடற்பரப்பை கண்காணிக்கும் செயல்பாட்டில் ஈடுப்பட்டிருந்தனர். இதன் போதே, கம்பஹா - அஸ்கிரிய பகுதியைச் சேர்ந்த மாணவர் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

காணாமல் போனவரை தேடும் பணியில் கடற்படை, ரங்கல இராணுவ முகாமின் சுழியோடி பிரிவு, கொழும்பு துறைமுக பொலிஸ் சுழியோடி பிரிவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

(ஐ)

# மகளின் கண்முன்னேயே தந்தை வெட்டிக்கொலை!

கொழும்பு, ஜூன் 28

9 வயதான மகளின் கண்முன்னே தந்தை ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். தகாத உறவு தொடர்பிலேயே இந்தக் கொலை இடம் பெற்றதாகவும் திஸ்ஸமஹராமை பொலிஸார் தெரிவித் தனர்.

அம்பாந்தோட்டை - திஸ்ஸமஹராமை - உடுவில பிரதேசத்தில் புதன்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், அதே இடத்தைச் சேர்ந்த 44 வயது நபரே கொலையானார்.

கொலையானவரின் மனைவி வெளிநாட்டில் பணிபுரிகிறார். 9 வயதான அவர்களின் மகள் தந்தையுடன் வசித்து வந்துள்ளார். இந்தநிலையில் தந்தைக்கு அந்தப் பகுதியை சேர்ந்த பெண் ஒருவருடன் தொடர்பு ஏற்பட்டுள்ளது. அந்தப் பெண்ணை தனது வீட்டுக்கு அழைத்து வந்து தங்க வைத்துள்ளார்.

இதனால், அந்தப் பெண்ணின் கணவர் இவருடன் முரண்பட்டுள்ளார். முரண்பாடு முற்றியதில் பெண்ணின் கணவர் மகளின் கண்முன்னேயே தந்தையை வெட்டிக் கொன்றார்.

இதைத் தொடர்ந்து பொலிஸார் சந்தேகநபரை கைது செய்தனர். சந்தேகநபருக்கும் உடலில் பல வெட்டுக்காயங்கள் காணப்பட்டன. இதையடுத்து, அவர் பொலிஸ் பாதுகாப்பில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# வனப்பகுதியில் காரிலிருந்து எரிந்த நிலையில் சடலம் மீட்பு

கொழும்பு, ஜூன் 28

காட்டுப் பகுதியில் எரியுண்ட நிலையில் கார் ஒன்றிலிருந்து சடலம் ஒன்று மீட்கப்பட்டது.

குருநாகல் மஹவ - தியாபதே காட்டுப் பகுதியில் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் குருநாகல் மில்லேவ பகுதியை சேர்ந்த 49 வயதான ஹோட்டல் உரிமையாளர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை தலைமுடி வெட்டுவதற்காக வீட்டை விட்டுச் சென்றிருந்த நிலையில் அவர் வீடு திரும்பவில்லை. இது தொடர்பில் அவரின் மனைவி குருநாகல் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்தார்.

விசாரணையில் ஈடுபட்ட பொலிஸார் காட்டுப் பகுதியில் அவரின் சடலத்தை கண்டுபிடித்தனர். இது கொலையாக இருக்கலாம் என்ற நோக்கில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சப்ரகமுவ மாணவன் மரணம் 11 பேருக்கும் மீளவும் மறியல்!

கொழும்பு, ஜூன் 28

பகிடிவதையால் சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவன் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 11 மாணவர்களை எதிர்வரும் ஜூலை 03ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு பலாங்கொடை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 11 மாணவர்களும் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தைச் சேர்ந்த 23 வயது மாணவன் ஒருவர் கடந்த ஏப்ரல் மாதம் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கை பேண அரசு தவறிவிட்டது!

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 28

**ஜனநாயக நாடொன்றில் இருக்க வேண்டிய வலுவான பொது மக்கள் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கை தற்போதைய அர சாங்கம் செயல்படுத்தத் தவறிவிட்டது. அரசாங்கம் பல்வேறு புள்ளிவிவரங்களை காண்பித்தாலும், மனித உயிர்களை வெறும் புள்ளிவிவரங்களுடன் சுருக்கிக் கொள்ள முடியாது இவ்வாறு விசனம் தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ.**

நாட்டில் தற்போது கொலை கலாசாரம் பெருகியுள்ளது. உயிரிழப்புகள், கொலைகள், வன்முறைகளும் அதிகரித்து வருகின்றன. திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் கும்பல்களும் அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகளும் சமூகத்தைப் பயமுறுத்தி வரு கின்றனர்.

இன்று சமூகத்தில் சட்டத் தின் ஆட்சி இல்லை. ஒரு ஜன நாயக நாட்டில் இருக்க வேண் டிய வலுவான பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கை தற்போதைய அரசாங் கம் செயல்படுத்தத் தவறிவிட்டது.

இவ்வாறு நாட்டில் இருக் கும் இளைஞர்களை நாம் இழக் கும்போது, கொலையாளிகள் மற்றும் அடையாளம் தெரி யாத துப்பாக்கிதாரிகளால் மனித உயிர்கள் இழக்கப்படும் போது, தற்போதைய அரசாங் கம் தேசிய பாதுகாப்புக்கு முக் கிய அம்சமாக அமைந்து காணப்படும் வாழும் உரி மையை உறுதி செய்யத் தவறி விட்டது.

கொலை கலாசாரம் நாளுக்கு நாள் அதிகரித்து வரு கிறது. அரசாங்கம் பல்வேறு புள்ளிவிவரங்களைக் காட்டி னாலும் இந்த மனித உயிர்களை வெறும் புள்ளிவிவரங்களுடன் சுருக்கிக் கொள்ள முடியாது.

இந்த மனித உயிர்களின் மதிப்பை பணத்தை வைத்தும் அளவிட முடியாது. கொலைகாரர்களின் அச்சுறுத் தல்களால் முழு சமூகமும் மூழ்க டிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலை யில், அரசாங்கத்திடமிருந்து இதற்கான தீர்வுகளும் பதில்க ளும் தேவை. சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதும் பொதுமக்க ளின் பாதுகாப்பை உறுதி செய் வதும் அரசாங்கத்தின் பொறுப் பாகும்.

ஆட்சிக்கு வருவதற்கு முன் னர் ஆளும் தரப்பினர் முறை மையில் மாற்றத்தை ஏற்படுத் துவோம் என தெரிவித்தனர். மக்களுக்கு இவ்வாறு கூறியே ஆட்சிக்கு வந்தனர்.

அவர்களால் முறைமையில் மாற்றத்தை கொண்டு வரமுடி யாது போயுள்ளது. தேசிய பாதுகாப்பு, குடி மக்களின் பாதுகாப்பு வாழும் உரிமையை உறுதி செய்வதற்கு நாங்கள் நிபந்தனையற்ற ஆதரவை தரு வோம் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# நீரிழிவு, உயர் குருதி அழுத்தம் சிறுவர்களிடையே அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 28

போசாக்குமிக்க உணவுகளை தவிர்ப்பதால் நாட்டில் சிறு வர் களிடையே நீரிழிவு, உயர் குருதி அழுத்தம் உள்ளிட்ட தொற்று நோய்களுக்கு ஆளாகும் அபாயம்தீவிரமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் போசாக்கு பிரிவின் பணிப்பா ளர் விசேட மருத்துவ நிபுணர் மோனிகா விஜயரத்ன தெரிவித்தார்.

போசாக்கு மாதத்தை முன் னிட்டு அவர் நடத்திய செய்தி யாளர் சந்திப்பிலேயே இத னைத் தெரிவித்தார்.

"நாட்டில் உள்ள பலர் தற் போது உலர் உணவு மற்றும் துரித உணவு பொருட்களை கொள்வனவு செய்வதை வாடிக் கையாகக் கொண்டுள்ள னர். அதிக எண்ணெய், உப்பு, சீனி, மா பொருட்களை உட் கொள் வதால் வயோதிபர்கள் மாத் திர மல்லாது சிறுவர்களின் ஆரோக்கியமும்கேள்விக்குறி யாகியுள்ளது.

கடந்த வருடம் சிறுவர்க ளின் போசாக்கு தொடர்பில் மேற் கொள்ளப்பட்ட ஆய் வில் 7 சதவீதமானோர் உடல் எடை அதிகரித்தவர்கள் என்று தெரிய வந்துள்ளது.

அத்துடன், 2024ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட உலகளாவிய சுகாதார ஆய் வில் 3 சதவீதமான சிறுவர்கள் அதி கரித்த உடற்பருமனால் அவ திப்படுவதோடு 12 சதவீ தமா னோர் உடல் எடை அதி கமா னவர்கள் எனவும் தெரிய வந்துள்ளது. சிறு வர்களின் உணவு வேளையை கருத்தில் கொள் ளும்போது 17 சதவீத மானோர் இனிப்பு பானங்க ளையும் 28 சதவீதமானோர் அதிக உப்பு சேர்க்கப்பட்ட உணவுகளை யும் 28 – 29 வீத மான சிறுவர் கள் அதிக கொழுப் புள்ள உண வுகளையும் 41 சத வீதமான பிள்ளைகள் அதிக சீனி அடங்கிய உணவுகளை யும் உட்கொள்கின்றனர் என்று தெரிய வந்துள்ளது.

மேற்படி தரவுகளுக்கமைய பாடசாலை மாணவர்களின் உணவுவேளை உரிய தரத்தில் இல்லை என்பது புலனாகிறது. சுகாதார அமைச்சின் தரவுகளுக் கமைய சிறுவர்கள் தொற்றா நோய்களுக்கு ஆளாகக்கூடிய அபாயம் அதிகரித்துள்ளது. சிறு வயதிலேயே நீரிழிவு, உயர் குருதி அழுத்தம்உள்ளிட்ட நாட் பட்ட நோய் நிலைமை களுக்கு ஆளாகலாம். போசாக்கு மிக்க உணவுகளை தவிர்ப்பதால் இவ் வாறானதொரு நிலை உரு வாகியுள்ளது - என்றார். (ஐ)

# எதிர்க்கட்சிகளுடனான கூட்டிணைவு தற்காலிகமே!

## பொதுஜன பெரமுன அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 28



உள்ளூராட்சி அதிகார சபைகளில் ஆட்சியமைப்பதற்கு மாத்திரம்தான் எதிர்க்கட்சிக ளுடன் பொதுவான கொள்கை அடிப்படையில் ஒன்றிணைந் துள்ளோம். இது தற்காலிக கூட்டிணைவே தவிர நிரந்தர மான கூட்டிணைவு அல்ல என்று சிறி லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செய லாளர் சாகர காரியவசம் தெரி வித்தார்.

ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கையி லேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன் றங்களில் எதிர்க்கட்சிகளின் ஒத் துழைப்புடன் இரண்டு உள்ளூ ராட்சி மன்றங்களின் அதிகா ரத்தை கைப்பற்றியுள்ளோம். இதேபோல, பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சி அமைப்பதற்கு கொள்கை அடிப்படையில் ஒத்துழைப்பு வழங்கியுள்ளோம்.

உள்ளூராட்சி மன்றத் தேர் தலில் நாட்டு மக்கள் ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்திக்கு முழுமையான ஆணை வழங்கவில்லை. எதிர்க்கட் சிகளுக்கு கணிசமானளவு ஆணை வழங்கியுள்ளார்கள். கிராமத்தின் அதிகாரம் எதிர்க் கட்சிகளுக்கு ஒப்படைக்கப் பட்டுள்ளது.

உள்ளூராட்சி அதிகாரச பைகளில் ஆட்சியமைப்பதற்கு மாத்திரம் தான் எதிர்க்கட்சி களுடன் பொதுவான கொள்கை அடிப்படையில் ஒன்றிணைந் துள்ளோம். இது தற்காலிக கூட் டிணைவே தவிர நிரந்தரமான கூட்டிணைவல்ல என்பதை தெளிவாக குறிப்பிட் டுகிறோம் - என்றார். (ஐ)

# ஜனாதிபதி அநுரவுடன் தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி எம்பெகி சந்திப்பு

கொழும்பு, ஜூன் 28

ஜனாதிபதி அநுரகுமார திஸ நாயக்க, தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி தபோ எம்பெகி இடையிலான சந் திப்பு நேற்றுமுன்தினம் ஜனா திபதி பணிமனையில் நடை பெற்றது.

இலங்கைக்கு இது தனது முதல் பயணம் என்றும் கடந்த காலங்களில் இலங்கையின் தேசிய ஒற்றுமை, நல்லிணக் கத்தில் ஆர்வமாக இருந்தார் எனவும் கூறிய முன்னாள் ஜனா திபதி எம்பெகி, இதுபோன்ற சமயத்தில் இலங்கைக்கு வருகை தருவது மகிழ்ச்சியளிக்கும் விடயம் என்று கூறினார்.

தென்னாபிரிக்காவும் இலங் கையும் புவியியல் ரீதியாக தூ ரத்தில் இருந்தாலும் வெவ்வேறு இனங்கள், மதங்கள் மற்றும் கலாசாரங்கள் இருப்பதால் இரு நாடுகளும் ஒற்றுமைகளைக் கொண்டுள்ளன என்றும் அவர் கூறினார். அமைதி மற்றும் நல் லிணக்கத்தை அடைவதில் இரு நாடுகளும் ஒரே மாதிரியான சவால்களை எதிர்கொள்கின்



றன. பல்வேறு வகையான மக் கள் குழுக்களை ஒன்றிணைப்ப தில் இலங்கை ஜனாதிபதியுடன் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள தான் விருப் பத்துடன் இருக்கிறார் என்றும் அவர் கூறினார்.

நாடுகளுக்கு இடையே ஒற்றுமையை மேம்படுத் துவதற்கும் நாடு எதிர்கொள் ளும் பொருளாதார சவால்களை சமாளித்து நாட்டை முன் னோக்கி நகர்த்துவதற்கும் தான் உறுதிபூண்டுள்ளார் என்று ஜனாதிபதி அநுரகுமார திசா நாயக்க தெரிவித்தார். (ஐ)

# ரூ. 3.69 கோடி வரி ஏய்ப்பு வழக்கில் சஜின் டி குணவர்த்தனவுக்கு பிணை

கொழும்பு, ஜூன் 28

பிடியாணை பிறப்பிக்கப்பட் டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின் டி வாஸ் குணவர்த்தன கொழும்பு நீதி வான் நீதிமன்றில் நேற்று முன் தினம் முற்பட்டார். இதைத் தொடர்ந்து அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

சஜின் டி வாஸ் குணவர்த்தன 25 இலட்சம் ரூபாய் பெறுமதி யான 4 சரீர பிணை, ஒரு இலட் சம் ரூபாய் பெறுமதியான ரொக்க பிணையில் விடுவிக்கப்பட்டுள் ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின் டி வாஸ் குணவர்த்தன 2010 - 2012 காலப்பகுதியில் அரசாங்கத்துக்கு 3 கோடியே 69 இலட்சம் ரூபாய் வருமான வரி செலுத்தவில்லை என கூறி உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளர் நீதி மன்றில் வழக்கு தாக்கல் செய் துள்ளார்.

ஆனால், சஜின் டி வாஸ் குணவர்த்தன இந்த வழக்கு மீதான விசாரணைகளுக்காக நீதிமன்றில் முன்னிலையாகாத நிலையில் அவருக்கு எதிராக கடந்த 23ஆம் திகதி பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது என் பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வெலே சுதா மீதான வழக்கு ஒக்ரோபரில் விசாரணைக்கு

கொழும்பு, ஜூன் 28

பணமோசடி தடுப்புச் சட் டத்தின் கீழ் போதைப்பொருள் கடத்தல்காரரான "வெலே சுதா" என்று அழைக்கப்படும் சமந்த குமார என்பவர் உள்ளிட்ட இருவருக்கு எதிராக நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு எதிர்வரும் ஒக்ரோபர் 10ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என என்று கொழும்பு மேல் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

இந்த மனு மேல் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்ன முன் னிலை யில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்ட போதே இந்த உத்த ரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த மனு எதிர்வரும் ஒக்ரோபர் 14 ஆம் திகதியும் விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்படவுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டு யானைகள் அட்டகாசம் அச்சத்துடன் வாழும் மக்கள்

திருகோணமலை, ஜூன் 28

**காட்டு யானைகளின் அட்டகாசத்தை கட்டுப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

திருகோணமலை, தோப்பூர் -செல்வநகர் கிராமத்துக்குள் நேற்று அதிகாலை நுழைந்த காட்டு யானைகள் தென்னை மரங்களை சேதப்படுத்தியுள்ளன. காய்த்து பலன்தரக் கூடிய சுமார் 10 தென்னை மரங்கள் இவ்வாறு சேதப்படுத்தப்பட்டுள்ளதாக காணி உரிமையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். ஊருக்குள் வந்து காட்டு யானைகள் இவ்வாறு சேதம் விளைவித்துள்ளமையால் மக்கள் அச்சத்துடன் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

காட்டு யானைகளின் அட்டகாசத்தை கட்டுப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் தோப்பூர் -செல்வநகர் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)


# திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுகூட்டம்

திருகோணமலை, ஜூன் 28

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக்கூட்டமானது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரும் வெளிவிவகார வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதியமைச்சருமான அருண் ஹேமச்சந்திர தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டத்தின் பல்வேறு அபிவிருத்திகள் தொடர்பிலும் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் நிறை குறைகள் உள்ளிட்ட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இதில், கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சண்முகம் குகதாசன், இம்ரான் மஹ்ரூப், ரொஷான் அக்மீமன, உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், மாகாண பிரதம செயலாளர் மற்றும் திணைக்களத் தலைவர்கள், முப்படைகளின் உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)



# 8 அடி நீளமுடைய முதலை பிடிபட்டது

கல்முனை, ஜூன் 28

பாலமுனை மருத்துவமனைக்கு அருகில் ஊருக்குள் புகுந்த 8 அடி நீளமான முதலை ஒன்றை பிடித்த மக்கள் மரத்தில் கட்டி வைத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் பாலமுனை பகுதியில் மக்களுக்கு அச்சுறுத்தலாக இருந்து வந்த மார் 8 அடி நீளமுடையது இராட்சத முதலை நேற்றுக் காலை பிடிக்கப்பட்டது.

இது பற்றி வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-01)

# நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்த சிலர் முயற்சி

திருகோணமலை, ஜூன் 28

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி சார்பாக போட்டியிட்ட புல்மோட்டையைச் சேர்ந்த ரிஷான் என்பவரை நானும் எனது சகோதரரும் கொலை செய்யப்போவதாகவும் அவரை மிரட்டியதாகவும் கூறி ஒரு பொய்யான வழக்கொன்றை தொடுத்துள்ளதுடன் எனது நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் பல பொய்யான கட்டுக்கதைகளை மக்கள் மத்தியில் பரப்பி வருவதாக குச்சவெளி பிரதேச சபைத் தவிசாளர் எம். முபாரக் தெரிவித்தார்.

இதுதொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எனக்கும் எனது சகோதரருக்கும் எதிராக தொடரப்பட்ட பொய்யான வழக்கு கடந்த 25 ஆம் திகதி குச்சவெளி நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற்றது. இவ்வழக்கு விசாரணைக்காக நாங்கள் இருவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்நிறுத்தப்பட்டோம் என்றும், மீண்டுமொரு பொய்யான வதந்தியையும் பரப்பியுள்ளனர். இந்தச் செயல்பாடுகளை அவர்களின் அரசியல் சுயலாபத்தை கருத்தில்கொண்டே அவரும் அவர் சார்ந்த குழுவினரும் முன்னெடுத்து வருகின்றனர். இவ்விடயம் பெரும் கவலையளிப்பதாக குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் எம். முபாரக் மேலும் தெரிவித்தார். (எ- 06)



# ஏறாவூர் பற்று சபையில் 13 கோடி ரூபாய் ஊழல்!

மட்டக்களப்பு, ஜூன் 28

மட்டக்களப்பு, ஏறாவூர் பற்று - செங்கலடி பிரதேச சபை பிரிவில் 13 கோடி ரூபாய் செலவில் போடப்பட்ட வீதி அபிவிருத்தியில் ஊழல் இடம்பெற்றுள்ளதாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செங்கலடி தளவாய் வட்டார உறுப்பினர் செ. நிலாந்தன் சபையின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார்.

இது குறித்து எதிர்வரும் சபை அமர்வில் பிரேரணை ஒன்றை முன்வைக்கவுள்ளதாக அவர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

ஏறாவூர் பற்று பிரதேச சபையின் கன்னி அமர்வு இடம்பெற்றது.

இதில் எமது பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் ஊழல் செயல்பாடுகள் குறித்து சபையின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தேன்.

அதில் மிக முக்கியமாக கடந்த ஏறாவூர் பற்று சபையின் ஆட்சிக் காலம் நிறைவடைந்து சபை செயலாளரின் அதிகாரத்தில் இருந்த காலத்தில் 13 கோடி ரூபாய் செலவில் போடப்பட்ட கிரவல் வீதிகளில் ஊழல் இடம் பெற்றுள்ளது

இது தொடர்பான விசாரணைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அதனை எதிர்வரும் சபை அமர்வில் பிரேரணையாக கொண்டுவந்து விசாரணைகள் நடத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளேன்.

நேரம் போதாமை மற்றும் நிகழ்ச்சி நிரலில் குறித்த விடயம் உள்வாங்கப்படாத நிலையில் முழுமையாக சபையில் உரையாற்ற முடியவில்லை.

ஏறாவூர் பற்று பிரதேச சபையின் ஆட்சிக் காலம் நிறைவடைந்து சபை செயலாளரின் அதிகாரத்தின் கீழ் இருந்த போது இலங்கையில் நடைபெறயிருந்த தேர்தல் ஒன்றை அடிப்படையாக கொண்டு சபையில் சேமித்து வைக்கப்பட்ட 13 கோடி ரூபாய்க்கு வீதிகளுக்கு அவசர அவசரமாக கிரவல் போடப்பட்டுள்ளது.

ஏறாவூர் பற்று பிரதேச சபை பிரிவில் உள்ள 15 சனசமூக நிலையங்களுக்கு வீதி புனரமைப்புக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்ட போதும் குறித்த ஒப்பந்தம் தனி நபர் ஒருவரின் ஊடக நடைமுறைப்ப டுத்தப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்பந்தம் ஊடாக போடப்பட்ட வீதிகள் பலவற்றில் எந்தவித கிரவல் மண்ணும் இல்லை என்பதோடு பல வீதிகளில் கிரவல் மண்ணுக்கு பதிலாக மண் போடப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு 13 கோடி ரூபாய் மக்கள் பணத்தில் ஊழல் இடம் பெற்றுள்ளது.- என்றார். (எ)

# பொத்துவில் பிரதேச சபை முஸ்லிம் காங்கிரஸ் வசம்

## தவிசாளராக முன்னாள் எம்.பி. முஷாரப்

பொத்துவில், ஜூன் 28

பொத்துவில் பிரதேச சபையின் தவிசாளரை தெரிவு செய்யும் கூட்டம் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல். எம். அஸ்மி தலைமையில் பொத்துவில் பிரதேச சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இதில், முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் முன்மொழியப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். எம். முஷாரப் ஏகமனதாக தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார்.

உப தவிசாளர் பதவிக்காக முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ஏ. மாபிர், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் டி. சுபோகரன் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டன. வாக்கெடுப்பில் சுபோகரன் 3 வாக்குகளையும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஏ. மாபிர் 13 வாக்குகளைப் பெற்று உப தவிசாளராக தெரிவானார். (எ-01)

# மாணவர்களுடன் பயணித்த பஸ் மின்கம்பத்துடன் மோதி விபத்து

திருகோணமலை, ஜூன் 28

திருகோணமலை, கந்தளாய் பொலிஸ் பிரிவிலுள்ள கந்தளாய் மணிக்கூட்டுக்கோபுரச் சந்திக்கு அருகே பேருந்தொன்று நேற்றுக் காலை மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

பாடசாலை மாணவர்கள் சுற்றுலாவுக்குச் சென்ற பேருந்தின் சாரதிக்கு ஏற்பட்ட திடீர் மாரடைப்பு இந்த விபத்துக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.


குருநாகலிலிருந்து பாடசாலை மாணவர்களை புல்மோட்டை பகுதிக்கு சுற்றுலாவுக்கு ஏற்றிவந்த பேருந்தின் சாரதிக்கே இவ்வாறு மாரடைப்பு ஏற்பட்டது.

விபத்தின் பின்னர் சாரதி உடனடியாக மீட்கப்பட்டு, கந்தளாய் மருத்துவனையில் சேர்க்கப்பட்டபோதும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். பேருந்தில் இருந்த மாணவர்கள் எவருக்கும் விபத்தால் பாதிப்பு ஏற்படவில்லை.

திடீரென நிலைதடுமாறிய பேருந்து வீதியோரம் தரித்து நின்ற இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் சேதப்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# காரைதீவு பிரதேச சபை தவிசாளர் பதவியேற்பு



காரைதீவு, ஜூன் 28

அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேச சபையின் புதிய தவிசாளர் சுப்பிரமணியம் பாஸ்கரன் மற்றும் உப தவிசாளர் முஹமட் இஸ்மாயில் ஆகியோரின் பதவியேற்பு நிகழ்வு காரைதீவு பிரதேச சபையில் நேற்றுக் காலை பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெற்றது. (எ-06)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லரசு அமெரிக்காவின் முகத்தில் அறைந்தோம்!

## ஈரான் உச்ச தலைவர் கமெனி தெரிவிப்பு

தெஹ்ரான், ஜூன் 28

**"வல்லரசு என்று கூறும் அமெரிக்காவின் முகத்திலயே அறைந்தோம்"- இவ்வாறு ஈரான் உச்ச தலைவர் ஐயத்துல்லா அலி கமெனி தெரிவித்தார்.**



இஸ்ரேல் - ஈரான் இடையே 12 நாட்களாக நீடித்த போர், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தலையீட்டின்பேரில் முடிவுக்கு வந்தது. இந்த நிலையில், நெதர்லாந்தில் நடைபெற்ற நேட்டோ மாநாட்டில் பங்கேற்ற ட்ரம்பிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். குறிப்பாக, "அமெரிக்க விமானத் தாக்குதலில் ஈரான் அணுசக்தி நிலையங்களுக்கு பெரிய பாதிப்பு இல்லை என்று அமெரிக்க உளவுத்துறை கூறியுள்ளதா?"என்று கேட்டனர்.

இதற்கு கோபமடைந்த ட்ரம்ப், "உளவுத்துறை தகவல் இறுதியானது அல்ல. ஈரான் அணுசக்தி நிலையங்களுக்கு முழுமையான சேதம் ஏற்பட்டுள்ளது. அதை சரிப்படுத்த பல ஆண்டுகள் ஆகும்"- என்று கூறினார். "ஈரான் மீண்டும் அணு ஆயுத உற்பத்தி பணியில் ஈடுபட்டால், அமெரிக்கா மீண்டும் தாக்குதல் நடத்துமா?"-என்று கேள்வி எழுப்பியபோது, "நிச்சயமாக"-என்று ட்ரம்ப் பதிலளித்தார். இதே சமயத்தில், அணுசக்தித் திட்டங்களை கைவிட மாட்டோம் என்று ஈரான் அறிவித்துள்ளது. ஐ. நா. சர்வதேச அணுசக்தி அமைப்புடன் ஒத்துழைப்பதை நிறுத்துவதற்கு பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தவுள்ளது. இதற்கிடையே, ஈரானும் அணுசக்தி நிலைய சேதத்தை பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளது.

இந்த நிலையில், இஸ்ரேல் - ஈரான் இடையே போர் நிறுத்தம் அமுலுக்கு வந்த பின்னர் முதல்முறையாக ஈரான் தலைவர் ஐயத்துல்லா அலி கமெனி கூறுகையில்,

"அமெரிக்காவின் முகத்திலேயே அறைந்தோம். ஈரானை தொட நினைத்தால் அதிக விலை கொடுக்க நேரிடும். கட்டாரில் உள்ள அமெரிக்க விமானப் படைத்தளத்தை தாக்கி பதிலடி கொடுத்துள்ளோம். எங்களை தொட நினைத்த அமெரிக்காவுக்கு பாடம் புகட்டியுள்ளோம். தற்போதைய போரில் அமெரிக்காவுக்கு எந்த பலனும் இல்லை. இஸ்லாமிய குடியரசு வெற்றி பெற்றது. மீண்டும் ஆக்கிரமிப்பு உள்ளிட்டவை செய்தால் எதிரி நிச்சயம் அதிகவிலை கொடுக்க நேரிடம். தேவைப்பட்டால் இதுபோன்ற நடவடிக்கைகள் எதிர்காலத்திலும் நிகழலாம்.

கட்டாரில் உள்ள அமெரிக்கத் தளங்கள் மீது ஈரான் நடத்திய தாக்குதலை குறிப்பிட்டு கமெனி இவ்வாறு கூறினார். (எ)

# இரசாயன தொழிற்சாலையில் நேற்று பயங்கர தீ விபத்து

லக்னோ, ஜூன் 28

இந்தியாவில் இரசாயன தொழிற்சாலையில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

உத்தரபிரதேச மாநிலம் நொய்டாவின் செக்டர் 2 பகுதியில் இரசாயன தொழிற்சாலை உள்ளது. இந்தத் தொழிற்சாலையில் நேற்று அதிகாலை பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

தீ மளமளவன தொழிற்சாலையின் பல்வேறு பகுதிகளுக்கும் பரவியது. தகவலறிந்து விரைந்து வந்த தீயணைப்புத்துறையினர் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இந்த தீ விபத்தில் யாருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. இதேவேளை, தீ விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (எ)

# காஸா மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதல்

## 21 பேர் உயிரிழப்பு

காஸா, ஜூன் 28

காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்திய துப்பாக்கிச் சூடு மற்றும் வான்வழித் தாக்குதல்களில் 21 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர்.

காஸா நகரத்தின் ஷேக் ரத்வான் புறநகரில் இடம்பெயர்ந்த குடும்பங்கள் வசிக்கும் ஒரு பாடசாலையின் மீது இஸ்ரேல் நேற்று முன்தினம் நடத்திய வான்வழித் தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டனர். இதேபோன்று கான் யூனிஸின் தெற்கில் உள்ள ஒரு முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 9 பேர் உயிரிழந்தனர்.

மத்திய காஸாவில் உள்ள ஒரு முக்கிய பாதையில் ஐ.நாவின் நிவாரணப் பொருட்களை வழங்கும் வாகனங்களுக்காக மக்கள் காத்திருந்தபோது இஸ்ரேல் இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் கொல்லப்பட்டனர், 10இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். (எ)

கையெழுத்திட இந்தியா மறுப்பு

# ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் கூட்டறிக்கை வெளியிடப்படவில்லை

குயிங்தவோ, ஜூன் 28

இந்தியாவின் காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிக்காததால் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் கூட்டறிக்கையில் கையெழுத்திட இந்தியா மறுத்துவிட்டது. இதனால் கூட்டறிக்கை வெளியிடப்படவில்லை.

கடந்த 2001ஆம் ஆண்டில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு தொடங்கப்பட்டது. இந்த அமைப்பில் சீனா, ரஷ்யா, இந்தியா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், பாகிஸ்தான், ஈரான், பெலாரஸ் ஆகிய நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இந்த அமைப்பின் பாதுகாப்புத் துறை அமைச்சர்கள் மாநாடு சீனாவின் குயிங்தவோ நகரில் கடந்த 25, 26ஆம் திகதிகளில் நடைபெற்றது. இதில் இந்தியாவின் சார்பில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பங்கேற்றார்.

மாநாட்டின் இறுதி நாளான நேற்று முன்தினம் கூட்டறிக்கையை வெளியிட முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால், இந்த கூட்டறிக்கையில் கையெழுத்திட இந்தியா திட்டவட்டமாக மறுத்துவிட்டது.இதனால் கூட்டறிக்கை வெளியிடப்படவில்லை. (எ)

# இந்தியாவுடன் அமெரிக்கா விரைவில் வர்த்தக ஒப்பந்தம்

## ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவிப்பு



வாஷிங்டன், ஜூன் 28

இந்தியாவுடன் விரைவில் வர்த்தக ஒப்பந்தம் செய்யப்படவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் கடந்த ஜனவரி மாதம் பதவியேற்றார். பதவியேற்றவுடன் அவர் பல்வேறு நாடுகள் மீது இறக்குமதி வரியை அதிகரித்தார். இதன்பின்னர், சீனாவுடன் ஏற்பட்ட வர்த்தக மோதலை தொடர்ந்து அந்த வரியை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளார். இதேவேளை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கும் அதிக வரி விதித்துள்ளார். இந்த வரிகளை தளர்த்த இந்தியா - அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

இந்த நிலையில் இந்தியாவுடன் விரைவில் வர்த்தக ஒப்பந்தம் ஏற்படும் என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் கூறுகையில், சீனாவுடன் நாம் வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளோம். அனைத்து நாடுகளுடனும் நாம் வர்த்தக ஒப்பந்தம் செய்யப்போவதில்லை. ஆனால், நமக்கு சிறந்த ஒப்பந்தங்கள் வரவுள்ளன. இந்தியாவுடன் விரைவில் வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகும் -என்றார். (எ)

# இந்தியாவின் வடமாநிலங்களில் மழை, வெள்ளத்தால் 10 பேர் பலி

புதுடில்லி, ஜூன் 28

இந்தியாவின் இமாச்சல பிரதேசம், காஷ்மீர், உத்தராகண்ட் உள்ளிட்ட வடமாநிலங்களில் மழை, வெள்ளம், விபத்து காரணமாக 10 பேர் உயிரிழந்தனர். பலரை காணவில்லை. இமாச்சல பிரதேசத்தில் மணாலி, ஜீவா நல்லா, ஷிலாகர், ஸ்ட்ரோ, ஹோரன்கர் உள்ளிட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் மேகவெடிப்பு ஏற்பட்டது. இந்த பகுதிகளின் நதிகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. (எ)

# போட்டியிடாத கட்சிகளை பட்டியலிலிருந்து நீக்க முடிவு

புதுடில்லி, ஜூன் 28

தேர்தலில் போட்டியிடாத கட்சிகளை பட்டியலிலிருந்து நீக்க இந்திய தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு, பட்டியலிலிருந்து நீக்கப்பட்டால், கட்சிகள் அலுவலகங்களை நேரடியாக வைத்திருக்க முடியாது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

2019 முதல் கடந்த 6 ஆண்டுகளாக ஒரு தேர்தலில் கூட போட்டியிடாத 345 பதிவுசெய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகளை பட்டியலிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளதாக இந்திய தலைமை தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (எ)

# இந்தியாவில் பாரிய மோசடி

புதுடில்லி, ஜூன் 28

இந்தியா முழுவதும் 700 வங்கிக் கிளைகளில் 8 இலட்சத்து 50 ஆயிரம் போலி கணக்குகள் உள்ளன என்று சி. பி. ஐ. (மத்திய புலனாய்வு துறை) கண்டுபிடித்துள்ளது.

இவற்றை சைபர் குற்றவாளிகள் பயன்படுத்தியதையும் சி. பி. ஐ. கண்டுபிடித்துள்ளது.

இந்தக் கணக்குகள், உரிய விதிமுறைகளை பின்பற்றாமலும், போலி ஆவணங்களை பயன்படுத்தியும் தொடங்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட நபருக்கு தெரிந்தோ அல்லது தெரியாமலோ தொடங்கப்பட்டுள்ளன. இதற்கு சில வங்கி அதிகாரிகள், முகவர்கள் மற்றும் இடைத்தரகர்கள் சைபர் குற்றவாளிகளுக்கு [illegible] சி.பி.ஐக்கு தெரியவந்துள்ளது.

# ஈரானுடனான போரில் எதையும் சாதிக்கவில்லை

## அமெரிக்காவை சாடிய கமெனி

தெஹ்ரான், ஜூன் 28

"இஸ்ரேலை காப்பாற்றும் முயற்சியாக ஈரானுடனான போரில் ஈடுபட்ட அமெரிக்கா எதையும் சாதிக்கவில்லை"- என்று ஈரான் உச்ச தலைவர் ஐயத்துல்லா அலி கமெனி தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் - ஈரான் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட பின்னர் முதல் முறையாக, இந்த போர் தொடர்பில் கமெனி தனது கருத்துக்களை எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். அதில் அவர், "போலியான சியோனிச (இஸ்ரேல்) ஆட்சியை வென்றதற்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு குழப்பங்களுக்கு மத்தியில், இஸ்ரேலிய ஆட்சி இஸ்லாமியக் குடியரசின் தாக்குதல்களால் கிட்டத்தட்ட வீழ்த்தப்பட்டு நசுக்கப்பட்டது.

அமெரிக்காவை ஈரான் வென்றதற்கு எனது வாழ்த்துகள். அமெரிக்கா நேரடியாகப் போரில் நுழைந்தது. ஏனெனில் அது அவ்வாறு செய்யவில்லை என்றால், இஸ்ரேல் ஆட்சி முற்றிலுமாக அழிக்கப்படும் என்று அந்த நாடு உணர்ந்தது. இஸ்ரேலில் ஆட்சியைக் காப்பாற்றும் முயற்சியில், அமெரிக்கா போரில் நுழைந்தது. எனினும், எதையும் அமெரிக்கா சாதிக்கவில்லை"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது போட்டியில் இலங்கை அணி ஆதிக்கம்

## பங்களாதேஷைவிட 154 ஓட்டங்கள் முன்னிலை

கொழும்பு, ஜூன் 28


பங்களாதேஷுக்கு எதிராக கொழும்பு எஸ். எஸ். சி. மைதானத்தில் நடைபெற்று வரும் இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்றைய தினம் மதிய போசன இடைவேளையின்போது இலங்கை அணி அதன் முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட்களை இழந்து 401 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

திறமையாக துடுப்பெடுத்தாடிய குசல் மெண்டிஸ் 42 ஓட்டங்களுடனும் அறிமுக வீரர் சொனால் தினுஷ 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதுள்ளனர்.

போட்டியின் மூன்றாம் நாளான நேற்று வெள்ளிக்கிழமை காலை தனது முதல் இன்னிங்ஸை 2 விக்கெட்கள் இழப்புக்கு 290 ஓட்டங்களிலிருந்து தொடர்ந்த இலங்கை, 79 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்தபோதிலும் பங்களாதேஷை விட 154 ஓட்டங்கள் முன்னிலை பெற்றிருந்தது.

இரண்டாம் நாளன்று மிகத் திறமையாகத் துடுப்பெடுத்தாடிய பதும் நிஸ்ஸங்க நேற்றுக் காலை 158 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து தனஞ்சய டி சில்வா (7), ப்ரபாத்



ஜெயசூரிய (10), கமிந்து மெண்டிஸ் (33) ஆகியோர் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் தய்ஜுல் இஸ்லாம் 114 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் நயீம் ஹசன் 59 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பங்களாதேஷ் அதன் முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்களையும் இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றது. (எ)

## 2ஆவது போட்டியில் பும்ராவுக்கு ஓய்வு?

பர்மிங்காம், ஜூன் 28

இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ராவுக்கு ஓய்வு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலாவது டெஸ்ட் போட்டி லீட்ஸில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் இங்கிலாந்து அணி 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தி தொடரை வெற்றியுடன் தொடங்கியுள்ளது. இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணி 0-1 என்ற கணக்கில் பின்தங்கியுள்ளது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது போட்டி ஜூலை 2ஆம் திகதி பர்மிங்காமில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் வெற்றி பெற இந்திய அணி தீவிர பயிற்சியை மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில் இந்த போட்டியில் இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ஜஸ்பிரித் பும்ராவுக்கு ஓய்வு வழங்க முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. பணிச்சுமை காரணமாக அவர் இந்தத் தொடரில் 3 போட்டிகளில் மட்டுமே விளையாடுவார் என்று ஏற்கனவே கூறப்பட்டுள்ளது.

இதன்படி 2ஆவது போட்டியில் அவருக்கு ஓய்வு அளிக்கப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஏற்கனவே தோல்வியால் துவண்டு போயுள்ள இந்திய அணிக்கு இது பலத்த பின்னடைவாக கருதப்படுகிறது.

முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் பும்ரா 5 விக்கெட்கள் வீழ்த்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## உதைபந்தாட்ட போட்டியில் மான்செஸ்டர் சிற்றி வெற்றி

புளோரிடா, ஜூன் 28

கிளப் உலகக் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் மான்செஸ்டர் சிற்றி அணி அபார வெற்றி பெற்றது.

கிளப் அணிகளுக்கான 21ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டி அமெரிக்காவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 32 அணிகள் 8 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு மோதுகின்றன. லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் அடுத்து சுற்றுக்கு முன்னேறும்.

இந்த நிலையில், நேற்று "ஜி" பிரிவில் நடந்த ஒரு ஆட்டத்தில் மான்செஸ்டர் சிற்றி (இங்கிலாந்து ) - யுவென்டஸ் (இத்தாலி ) அணிகள் மோதின.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய மான்செஸ்டர் சிற்றி அணி 5-0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது. (எ)

## முதல் டெஸ்ட் போட்டியில் ஆஸி. அணி தடுமாற்றம்

பார்படாஸ், ஜூன் 28

மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி தடுமாறி வருகிறது.


அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி மேற்கு இந்திய தீவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதில் இவ்விரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி பார்படாஸில் கடந்த 25 ஆம் திகதி தொடங்கியது.

இதன்படி அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 180 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. அதிகபட்சமாக டிராவிஸ் ஹெட் 59 ஓட்டங்கள் அடித்தார். ஜெய்டன் சீல்ஸ் 5 விக்கெட்களும், ஷமர் ஜோசப் 4 விக்கெட்களும் வீழ்த்தினர்.

இதனையடுத்து முதல் இன்னிங்ஸை தொடங்கிய மேற்கு இந்திய தீவுகள் அணியும் தடுமாற்றத்துடனே தொடங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களான கிரெய்க் பிராத்வெயிட் 4 ஓட்டங்களிலும் ஜான் கம்பெல் 7 ஓட்டங்களிலும் ஸ்டார்க் பந்துவீச்சில் வீழ்ந்தனர். சிறிது நேரம் தாக்குப்பிடித்த கீசி கார்டி 20 ஓட்டங்களில் பட் கம்மின்ஸ் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய ஜோமல் வாரிக்கன் முதல் பந்தில் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

முதல் நாள் ஆட்ட நேர முடிவில் மேற்கு இந்திய தீவுகள் அணி 4 விக்கெட்களை இழந்து 57 ஓட்டங்கள் அடித்திருந்தது. பிரண்டன் கிங் 23 ஓட்டங்களுடனும், ரோஸ்டன் சேஸ் ஓர் ஓட்டத்துடனும் களத்தில் இருந்தனர். இந்தச் சூழலில் 2ஆவது நாள் ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மேற்கு இந்திய தீவு



கள் அணி முதல் இன்னிங்ஸில் 190 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. அந்த அணியில் அதிகபட்சமாக ரோஸ்டன் சேஸ் 44 ஓட்டங்களும், ஷாய் ஹோப் 48 ஓட்டங்களும் அடித்தனர். அவுஸ்திரேலியா தரப்பில் ஸ்டார்க் 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 10 ஓட்டங்கள் பின்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ்திரேலியா மீண்டும் தடுமாறியது. சொந்த மண் சாதகத்தை பயன்படுத்தி கொண்ட மேற்கு இந்திய தீவுகள் வீரர்கள் சிறப்பாக பந்துவீசி விக்கெட்களை சாய்த்தனர். தொடக்க ஆட்டக்காரர்களான சாம் கான்ஸ்டாஸ் 5 ஓட்டங்களிலும், உஸ்மான் கவாஜா 15 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த கேமரூன் கிரீன் (15 ஓட்டங்கள்), ஜோஷ் இங்கிலிஸ் (12ஓட்டங்கள்) நீண்ட நேரம் தாக்குப்பிடிக்கவில்லை.

2ஆவது நாள் முடிவில் அவுஸ்திரேலிய அணி 4 விக்கெட்களை இழந்து 92 ஓட்டங்களுடன் தடுமாறி வருகிறது. டிராவிஸ் ஹெட் 13 ஓட்டங்களுடனும், வெப்ஸ்டர் 19 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். அவுஸ்திரேலியா இதுவரை 82 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது. (எ)



## தென்னாபிரிக்க அணியில் இடம்பிடித்தார் பிரெவிஸ்

கேப்டவுன், ஜூன் 28

தென்னாபிரிக்க அணியில் டெவால்ட் பிரெவிஸ் மீண்டும் இடம்பிடித்துள்ளார்.

தென்னாபிரிக்கா, நியூசிலாந்து மற்றும் சிம்பாவே இடையேயான முத்தரப்பு ரி - 20 கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 14ஆம் திகதி தொடங்குகிறது.

இந்தத் தொடரில் பங்கேற்கும் வீரர்கள் தற்போது அறிவிக்கப்பட்டு வருகின்றனர். அந்த வகையில் தென்னாபிரிக்க அணியில் டெவால்ட் பிரெவிஸ் இடம்பெற்றுள்ளார். அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 2023 ஓகஸ்ட்டில் நடைபெற்ற ரி - 20 தொடரில் பங்கேற்ற பிரெவிஸ் 2 ஆட்டங்களில் மட்டுமே விளையாடினார். இதன்பின்னர் அவருக்கு அணியில் வாய்ப்பு வழக்கப்படவில்லை.

இதனிடையே, கடந்த ஐ.பி.எல். தொடர்பில் சென்னை அணியில் இடம்பெற்ற பிரெவிஸ் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இதனைத் தொடர்ந்து 2 ஆண்டுகளுக்குப்பின் முத்தரப்பு ரி - 20 தொடரில் தென்னாபிரிக்க அணியில் பிரெவிஸ் இடம்பெற்றுள்ளார். அவருக்கு பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். (எ)

## சிம்பாவேயில் ஜூலையில் ரி - 20 முத்தரப்பு தொடர்

### நியூசிலாந்து அணி அறிவிப்பு

வெலிங்டன், ஜூன் 28

தென்னாபிரிக்கா, நியூசிலாந்து மற்றும் சிம்பாவே கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு ரி - 20 தொடர் சிம்பாவேயில் ஜூலை 14ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா 2 முறை மோதும். இதன் முடிவில் புள்ளிப் பட்டியலில் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறும்.

இந்த நிலையில் இந்தப் போட்டிக்கான நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. மிட்செல் சாண்ட்னர் தலைமையிலான இந்த அணியில் முன்னணி வீரர்களான ஆடம் மில்னே மற்றும் மேட் ஹென்ரி நீண்ட நாட்கள் கழித்து அணிக்குத் திரும்பியுள்ளனர்.

நியூசிலாந்து அணி விவரம் பின்வருமாறு:-

மிட்செல் சாண்ட்னர், பின் ஆலன், மைக்கேல் பிரேஸ்வெல், மார்க் சப்மென், ஜேக்கப் டபி, ஜாக் போல்க்ஸ், மேட் ஹென்ரி, பெவன் ஜேக்கப்ஸ், ஆடம் மில்னே, டேரில் மிட்செல், வில் ஓ"ரூர்க், கிளென் பிலிப்ஸ், ரச்சின் ரவீந்திரா, ரிம் சீபர்ட், இஷ் சோதி ஆகியோர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதை...

வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு 60 போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கையளிக்கப்பட்டுள்ளார். விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-05)

## இந்திய....

படகு ஒன்றில் இருந்த நான்கு மீனவர்களை கடற்படையினர் பாதுகாப்பாக மீட்டனர்.

இந்த தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கையின் போது மீட்கப்பட்ட நான்கு இந்திய மீனவர்களும் இந்தியாவின் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரிய வந்துள்ளது. மேலும் அவர்கள் கடற்படையினரால் கடற்கரைக்கு அழைத்து வரப்பட்டதுடன் . மேலதிக உதவிகளை வழங்கியுள்ளனர். குறித்த மீனவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

## செம்மணி...

தற்போது மாறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இது தொடர்பில் அடிப்படைவாதிகள் நிலைப்பாடு ஒன்றுக்கு வர முற்படுகின்றார்கள். எனவே, அரசாங்கம் இது தொடர்பில் மரபணு பரிசோதனைகளை முன்னெடுக்க வேண்டும்.

இதில் தமிழர்களுடைய எலும்புக்கூடுகள் மாத்திரம் இருக்க முடியும் என்ற நிலைப்பாட்டுக்கு எவ்வாறு வர முடியும்.

52 மற்றும் 83 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற கலவரங்கள் மற்றும் 30 வருட கால யுத்தம் என்பவற்றின் போது தென்னிலங்கைக்கு செல்லவிடாது கொடூரமான முறையில் கொல்லப்பட்ட சகோதர இனத்தவருடையதாக இருக்கலாம் அல்லவா?

அது தொடர்பில் எவருக்கும் கருத்துக்களை முன்வைக்க முடியும்.

எனவே விஞ்ஞான ரீதியான விசாரணைகளை முன்னெடுத்து உண்மைத் தன்மையை வெளிப்படுத்தவேண்டும்- என்றார். (அ)

## யாழ்.மாநகர...

கூட்டம் ஆரம்பமான நிலையில் கடந்த வாரம் ஏற்பட குழப்பத்தால் ஒத்திவைக்கப்பட்ட சுகாதாரக் குழுவுக்கான உறுப்பினர்கள் தெரிவு நடைபெற்றது.

அதன் பின்னர் மேலும் சில குழுக்களுக்கான உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். குழுக்களுக்கான உறுப்பினர்கள் தெரிவு முடிந்தவுடன் கூட்டத்தை முடித்துக்கொள்வதாக முதல்வர் அறிவித்து சபையிலிருந்து வெளியேறினார்.

இந்நிலையில் சபையின் உறுப்பினர் தர்சானந்த் கடந்த 23 ஆம் திகதிய கூட்டத்தில் சுகாதார குழுவில் உள்வாங்கப்பட உறுப்பினர்கள் குறித்து ஏற்பட்ட இணக்கமின்மையால் கூட்டம் நிறுத்தப்பட்டு நேற்று அதன் தொடர்ச்சி நடைபெற்றது. ஆனால் அன்று குழப்பத்தை ஏற்படுத்திய அதே தெரிவுகள் நேற்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனது. இது எவ்விதத்தில் நியாயமானது என கேள்வி எழுப்பியதுடன், தமது கருத்துக்களை கூற சபையில் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் கூட்டத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டாம் என கோரிக்கை விடுத்து சபையின் குறுக்கே சென்று முதல்வர் வெளியேறுவதை தடுத்ததால் குழப்பம் ஏற்பட்டது.

ஆனாலும் முதல்வர் வெளியேறியதால் தமது எதிர்ப்பை காண்பிக்க நியாயம் கிடைக்கவில்லை என கூறிய உறுப்பினர் தர்சானந்த், சபையில் வெளிநபரது ஆதிக்கம் வலுவாக இருப்பதாகவும் இது சபையின் நன்மைக்கு ஏற்றதல்ல எனவும் சுட்டிக்காட்டினார். (அ)

## மோ.சைக்கிளில்...

தெரேசா (வயது 52) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 19ஆம் திகதி ஊர்காவற்துறையில் உள்ள தனது வீட்டை பார்ப்பதற்கு மகனுடன் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தார். இதன்போது ஊர்காவற்துறை வைத்திய சாலைக்கு முன்பாக இடது பக்கமாக ஒருவர் சைக்கிளில் வந்துள்ளார்.

இந்நிலையில் திடீரென பிரேக்கை அழுத்தியவேளை பின்னாலிருந்த குறித்த பெண் திடீரென கீழே விழுந்து மயங்கியுள்ளார். பின்னர் ஊர்காவற்துறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று காலை உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ)

## இந்திரா காந்தி...

இந்த உடன்படிக்கை காரணமாக இந்திய மீன வர்களுக்கு சில இடங்களில் மீன்பிடிப்பதற்கு இருந்த உரிமை தாரை வார்க்கப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் எமது மீனவர்கள் கைதுசெய்யப்படுவது குறித்து நாங்கள் கேள்விப்படுகின்றோம். அவசர கால நிலையின் போது கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையே இதற்கு காரணம். இந்த உடன்படிக்கை காரணமாக இலங்கை கடற்பரப்பின் சில பகுதிகளில் எங்கள் மீனவர்கள் மீன்பிடிப்பதற்கான உரிமை கைவிடப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார்.

அக்காலப் பகுதியில் உண்மையான பாராளுமன்றம் செயற்பட்டிருந்தால் பராளுமன்ற விவாதங்கள் இடம்பெற்றிருக்கும் இந்த முடிவு நிராகரிக்கப்பட்டிருக்கும் என தெரிவித்துள்ள அவர், அந்த உடன்படிக்கையின் விளைவுகளை இன்றும் தமிழ்நாட்டில் காணமுடிகின்றது என தெரிவித்துள்ளார். (அ)

## பலாலி....

தமிழ் மக்கள் இன்னும் 2 ஆயிரத்து 400 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களில் மீள் குடியேற்றப்படாமல் இருக்கின்றார்கள்.

அவர்களை மீள்குடியேற்றுவதற்காக அனைவருடைய ஒத்துழைப்பும் தேவையாக இருக்கின்றது.

எங்களுடைய பல உறுப்பினர்கள் கூட தமது சொந்த நிலங்களுக்கு திரும்பாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கடந்த ஏப்ரல் மாதம், மீள்குடியேற்ற அமைச்சினால் 182 மில்லியனுக்கும் மேற்பட்ட நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதும் அதற்கான வேலை திட்டங்கள் இன்னும் ஆரம்பிக்கப்படாமல் இருக்கின்றது.

நாங்கள் சபையை பொறுப்பெடுத்த பின்னர், அதனை விரைவுபடுத்த வேண்டிய தேவைப்பாடு இருக்கிறது- என குறிப்பிட்டார்.

தொடர்ந்து சபைக்கான நிலையியற் குழுக்கள் அமைக்கப்பட்டதுடன், சபையில் சில தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன.

பிரதேச சபைக்கு சொந்தமான பலாலி சந்தையை விடுவித்து தருமாறு கோரி சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

குறித்த தீர்மானம், யாழ்ப்பாண மாவட்ட இராணுவ தளபதிக்கும், வடக்கு மாகாண ஆளுநருக்கும் எழுத்து மூலம் அனுப்பப்படும் என தவிசாளர் தெரிவித்தார்.

அத்துடன், கடந்த 2023 ஆம் ஆண்டு விடிவிக்கப்பட்ட, வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தை மீள அமைப்பதற்கு, விரைவில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும் என தவிசாளர் குறிப்பிட்டார். (அ)

## தவிசாளர் தெரிவிலிருந்து...

நேற்று வெளிநடப்பு செய்தனர்.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கான தவிசாளர்,உபதவிசாளர் தெரிவுகள் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் நேற்று நடைபெற்றன.

இதன்போது சபையின் தவிசாளராக தமிழரசுக் கட்சி சார்பில் பா.பாலேந்திரனின் பெயர் பிரேரிக்கப்பட்ட நிலையில் தேசிய மக்கள் சக்தி சார்பில் ராஜலிங்கம் கார்த்தீபனின் பெயர் பிரேரிக்கப்பட்டது.

தவிசாளராக இருவரது பெயர்கள் பிரேரிக்கப்பட்டமையால் வாக்கெடுப்பின் மூலம் அதனை தெரிவதற்கான நடவடிக்கை ஆணையாளரால் மேற்கொள்ளப்பட்டது. அந்த வகையில் வாக்கெடுப்பை இரகசியமாகவா, அல்லது பகிரங்கமாகவா நடத்துவது என அவரால் கோரப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் கார்த்தீபன் தெரிவுகளை இரகசியமாக மாத்திரம் நடத்துமாறு கோரிக்கை முன்வைத்தார். ஏனெனில் இது கட்சித் தலைவர்களால் திட்டமிட்டு எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் உறுப்பினர்கள் நடக்கவுள்ளனர். இதனால் மக்களின் ஆணை புறக்கணிக்கப்பட்டுள்ளது. எனவே இரகசிய வாக்கெடுப்பை நடத்துவதன் மூலமே உறுப்பினர்களின் உண்மை நிலை வெளிப்படும். கொழும்பில் ஒரு நடைமுறை இங்கு ஒரு நடைமுறையா என கேள்வி எழுப்பியதுடன்

ஆணையாளர் நடுநிலையாகச் செயற்படவில்லை என குற்றம்சாட்டினார். அவரது கருத்துக்கு ஆதரவாக அந்த கட்சியின் ஏனைய உறுப்பினர்களும் குரல் கொடுத்தனர்.

இதன்போது சட்டம் இவ்வாறே சொல்கின்றது. அதன்படியே தெரிவுகளை என்னால் நடத்தமுடியும். அதில் உங்களுக்கு எதேனும் பிரச்னை இருந்தால் நீங்கள் நீதிமன்றத்தை நாடலாம். எனவே இந்த நிகழ்வை குழப்பவேண்டாம். தெரிவுகளை நடத்த ஒத்துழைப்பு வழங்குமாறு ஆணையாளரால் பதில் வழங்கப்பட்டது.

இதனை ஏற்க மறுத்த தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் தெரிவுகளை புறக்கணித்து சபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர். தேசிய மக்கள் சக்தியின் 6 உறுப்பினர்களுடன், இலங்கை தொழிலாளர் கட்சியின் 2 உறுப்பினர்கள், சுயேச்சை குழுவின் ஒரு உறுப்பினர் என 9 உறுப்பினர்கள் இதன் போது வெளிநடப்புசெய்தனர்.

எனினும் சபையில் போதிய கோரம் இருந்த நிலையில் தவிசாளர் தெரிவு பகிரங்க வாக்கெடுப்பின் மூலம் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சர்வதேச...

மனித புதைகுழிகளிலும் சர்வதேச தலையீட்டின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது.

"விசாரணைகள் சர்வதேச தரத்திற்கு அமைய பாரபட்சமின்றி முழுமையாக நடத்தப்பட வேண்டும். நாடு முழுவதும் ஏராளமான மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன," என இலங்கையில் உள்ள ஐ.நா. அலுவலகம் சமூக ஊடகங்களில் பதிவிட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் சமூகம், சர்வதேச தரத்திற்கு அமைய சர்வதேச மேற்பார்வையின் கீழ் மனிதப் புதைகுழிகள் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட வேண்டும் என அழைப்பு விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வடக்கில் காணிகளை...

அந்த வர்த்தமானி அறிவித்தல்படி காணிகளை நிரூபிப்பதற்கு வழங்கப்பட்ட காலக்கெடு முடிந்து, அவற்றை அரசு சுவீகரிப்பதற்கான அதிகாரம் அந்த வர்த்தமானியின் கீழ் அரசுக்கு வருவதற்கு சுமார் பன்னிரண்டு மணி நேரமே இருக்கையில் - கடைசிக் கட்டத்தில் - இந்த உத்தரவை உயர்நீதிமன்றம் வழங்கியிருக்கின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவைப் பரிசீலித்த உயர்நீதிமன்ற நீதியரசர்கள் யஸந்த கோதாகொட, சம்பத் அபேகோன் மற்றும் சம்பத் விஜயரத்ன உள்ளிட்ட நீதியரசர்கள் ஆயம் இந்த உத்தரவை நேற்று முற்பகல் பிறப்பித்தது.

மேற்படி வர்த்தமானியின் கீழ் காணி சுவீகரிப்பு அதிகாரம் இலங்கை அரசுக்கு நேற்று நள்ளிரவுக்கு பின் வரவிருக்கையில் இந்த மனு நேற்று காலை உயர்நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஏற்கனவே இந்த விடயம் தொடர்பாக அமைச்சரவையின் முடிவை அரசு தரப்பு கேட்டு, அறிந்து உயர்நீதிமன்றத்துக்குத் தெரிவிப்பதற்காக வழக்கு நேற்றைய தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

வழக்கு நேற்று மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டதும் அமைச்சரவையின் முடிவு குறித்து நீதியரசர்கள் அரச தரப்பு சட்டத்தரணியிடம் விசாரித்தனர்.

மேற்படி வர்த்தமானியை கை வாங்குவதாக அமைச்சரவை முடிவு செய்திருக்கின்றது என்று அரசுத் தரப்பு தெரிவித்தது.

கைவாங்கும் வர்த்தமானி அறிவித்தல் எப்போது வெளியாகும் என்று நீதிமன்றம் வினவிய போது பெரும்பாலும் நேற்று வெள்ளிக்கிழமை நள்ளிரவு அது வெளியாகும் என அரசுத் தரப்பில் பதில் அளிக்கப்பட்டது.

அரசு தரப்பில் உறுதியான - தீர்க்கமான - [illegible] முடிவாக அதனை அரசு தரப்பு சட்டத்தரணிகள் உறுதிப்படுத்துவார்களா என உயர்நீதிமன்றம் விசாரித்த போது அதற்குத் தெளிவான பதில் அரசு தரப்பு சட்டத்தரணிகளால் முன்வைக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது. தங்களுக்குக் கிடைத்த வழிகாட்டல் குறிப்பில் அப்படித்தான் குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்று அரசு தரப்பில் கூறப்பட்டதனால், அந்தப் பதிலில் திருப்தி காணாத நீதியரசர்கள் வழக்கின் வாதத்தைத் தொடர்ந்து முன்வைக்குமாறு மனுதாரர் தரப்பு சட்டத்தரணியான ஜனாதிபதி சட்டத்தரணி க. கனகேஸ்வரனைக் கேட்டுக்கொண்டனர்.

இதையடுத்து கனகேஸ்வரன் தமது வாதத்தை முன்வைத்தார். அதனை ஏற்றுக்கொண்டு மேற்படி வர்த்தமானியின் நடைமுறையாக்கத்துக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்து வழக்கை ஜூலை இரண்டாம் திகதிக்கு ஒத்திவைத்தது.

அடுத்த தவணை வழக்கு எடுக்கப்படும் போது மேற்படி வர்த்தமானி அறிவித்தல் விலக்கப்பட்டிருந்தால் அது பற்றிய புதிய வர்த்தமானி அறிவித்தலை மனுதாரருக்கும் நீதிமன்றத்துக்கும் சமர்ப்பிக்கும்படி அரசு தரப்புக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

அடுத்த தவணை வழக்கு எடுக்கப்படும் சமயத்தில் மேற்படி சர்ச்சைக்குரிய வர்த்தமானி அறிவித்தல் விலக்கப்பட்டு இருக்குமானால் வழக்கை அத்துடன்- அன்றைய தினத்துடன்-முடிவுக்கு கொண்டு வர உயர்நீதிமன்றம் தன்னுடைய இசைவைத் தெரிவித்திருந்தது.

இந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கில் மனுதாரர் சுமந்திரன் சார்பில் சட்டத்தரணி மோகன் பாலேந்திராவின் அறிவுறுத்தலின் பேரில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான க. கனகேஸ்வரன், விரான் கொறேயா மற்றும் சட்டத்தரணிகளான பவானி பொண்சேகா, லக்ஷ்மணன் ஜெயக்குமார், நிலோஷன் ரவீந்திரன், பெனிஸ்லஸ் துஷான் ஆகியோர் ஆஜராகினர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## மீன்பிடி துறைமுக கூட்டுத்தாபன முன்னாள் தலைவர் கைதானர்!

கொழும்பு, ஜூன் 28

இலங்கை மீன்பிடி துறைமுக கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் உபாலி லியனகே இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

மீன்பிடி துறைமுக கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற ஒழுங்கு விதி மீறல்கள் தொடர்பிலேயே உபாலி லியனகே கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிய வருகின்றது. (ஐ)

## 16 வயது சிறுமி வன்புணர்வு சந்தேகநபர்கள் இருவர் கைது

கொழும்பு, ஜூன் 28

16 வயதுடைய சிறுமியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினர் என்று சந்தேகிக்கப்படும் இருவரை தாம் கைது செய்துள்ளனர் என்ற பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

40 மற்றும் 42 வயதுடைய பதுளை - பசறை வெல்கொல்ல பகுதியை சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பசறை பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட சிறுமியை அவரின் 11ஆவது வயது முதலே இருவரும் வன்புணர்வுக்கு உட்படுத்தி வந்துள்ளனர் என்பது விசாரணைகளில் தெரிய வந்துள்ளுது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் நீதிமன்ற உத்தரவின்படி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். மற்றையவரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## பலவித சுவைகளில் 'கப்கேக்' தயாரிக்கிறது திரிபோஷா!

கொழும்பு, ஜூன் 28

திரிபோஷா நிறுவனம் பல்வேறு சுவைகளில் சத்தான மற்றும் சுவையான திரிபோஷா கப் கேக் தயாரிப்பை அறிமுகப்படுத்தவுள்ளது. சொக்லேட், வாழைப்பழம், வெண்ணிலா, ஸ்ட்ராபெரி, மாம்பழ சுவைகளில் திரிபோஷா கப் கேக்கை தயாரிக்கவுள்ளது - என்று அதன் புதிய தலைவர் அமல் நிரோஷன அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், நாடு முழுவதும் திரிபோஷாவை விநியோகிக்க எமது அமைப்பு தயாராக இருக்கிறது. கர்ப்பவதி தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு திரிபோஷாவை மீண்டும் வழங்க முடியும்.

இதேவேளை, திரிபோஷா நிறுவனம் பல்வேறு சுவைகளில் சத்தான மற்றும் சுவையான திரிபோஷா கப் கேக் தயாரிப்பை அறிமுகப்படுத்தவுள்ளது. சொக்லேட், வாழைப்பழம், வெண்ணிலா, ஸ்ட்ராபெரி, மாம்பழ சுவைகளில் திரிபோஷா கப் கேக்கை தயாரிக்கவுள்ளது - என்று கூறினார். (ஐ)

## சர்வதேச விசாரணை மூலமாகவே காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி

### அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்

கொழும்பு, ஜூன் 28

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக் கானநீதி ஒரு சர்வதேச சுயாதீன விசாரணையையும் பொறுப்புக்கூறலையும் கோருகிறது என்று அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் டொன் டேவிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவரின் சமூகவலைதளப் பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

“இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட அட்டூழியங்களை செம்மணியில் உள்ள புதைகுழிகள் வேதனையுடன் நினைவூட்டுகின்றன.

நாம் உண்மையி லிருந்து விலகிச் செல்ல முடியாது. காணாமல் ஆக்கப் பட்டவர்களுக்கான நீதி ஒரு சுயாதீனமான சர்வதேச விசாரணையையும் பொறுப்புக்கூறலையும் கோரு கிறது”, என்று குறிப்பிட்டுள்ளார்.

### உயர் குருதி அழுத்த நோய்க்கு

# இலங்கையில் மருத்துவ வசதி இல்லை இருவருக்கு பிரிட்டன் புகலிட அனுமதி!

லண்டன், ஜூன் 28

**உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலங்கையில் உரிய தரமான மருத்துவ சிகிச்சைகள் இல்லை என்பதால் புகலிட கோரிக்கையாளர்கள் இருவருக்கு பிரிட்டனில் தொடர்ந்தும் தங்கியிருக்க அந்த நாட்டு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதாக ரெலிகிராப் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் ரெலிகிராப் வெளியிட்ட செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

உயர் இரத்த அழுத்தத்துக்கான சிகிச்சை தங்கள் சொந்த நாட்டில் "போதுமானதாக இல்லை" என்று கூறி ஒரு வயதான இலங்கை தம்பதியர் இங்கிலாந்தில் தங்குவதற்கான உரிமையை பெற்றுள்ளனர். 60 களின் பிற்பகுதியில் இருக்கும் பெயர் குறிப்பிடப்படாத கணவன், மனைவி 2022 இல் தங்கள் மகள் மற்றும் மருமகனை பார்க்க பிரிட்டனுக்கு வந்தனர்

ஆனால், இரண்டு மாதங்களுக்குப் பிறகு அவர்கள் புகலிட அனுமதி கோரினர் இது உள்துறை பணிமனையால் மறுக்கப்பட்டபோது அவர்கள் மேல்முறையீடு செய்தனர்.

கணவர் ஒரு குடியேற்ற தீர்ப்பாயத்தில் தான் மனச்சோர்வு கடுமையான பதற்றம், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்றும் தெற்காசிய நாட்டில் சிகிச்சை பெற "விருப்பமில்லை" என்றும் கூறினார். அவர்களைத் திருப்பி அனுப்புவது அவர்களின் மனித உரிமைகளை மீறும் என்று ஒரு புகலிட நீதிபதி ஒப்புக்கொண்டார்.

இலங்கையில் தரமற்ற மருத்துவ சிகிச்சை காரணமாக அவர்கள் தங்கலாம் என்ற தீர்ப்பை உள்துறை பணிமனை சவாலுக்கு உட்படுத்தியது. கணவர் "தீவிரமாக நோய் வாய்ப்பட்டுள்ளார்" என்பதற்கான வலுவான ஆதாரங்களை முன்வைக்கவில்லை என்று வாதிட்டது. ஆனால், குடிவரவு மற்றும் புகலிடக் குழுவின் உயர் தீர்ப்பாயம் இதை ஏற்கவில்லை இலங்கையை சேர்ந்த புகலிடக் கோரிக்கையாளர்களின் கூற்றை ஆதரித்து தீர்ப்பளித்தது.

நீதிமன்றத்தால் பெயர் குறிப்பிட அனுமதி வழங்கப்பட்ட தம்பதியர் மே 2022 இல் இங்கிலாந்துக்குள் நுழைந்தனர் என்று விசாரணையில் கூறப்பட்டது. அந்த ஆண்டு ஜூலையில் கணவர் மற்றொரு மருமகனின் குடும்பத்தினரால் செய்யப்பட்ட அச்சுறுத்தல்கள் காரணமாக துன்புறுத்தப்படுவார்கள் என்ற அச்சம் இருப்பதாகத் தெரிவித்து தனது மனைவியுடன் இணைந்து புகலிட கோரிக்கையை முன்வைத்தார்.

பின்னர் அவர்கள் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் அடிப்படையில் மேலும் கோரிக்கைகளை முன்வைத்தனர். அவை கடந்த ஆண்டு பெப்ரவரியில் உள்துறை பணிமனையால் நிராகரிக்கப்பட்டன.

எனினும், அவர்கள் தொடர்ந்த மேன்முறையீட்டை முதல் நிலை தீர்ப்பாயம் ஏற்றுக் கொண்டதையடுத்து அரசாங்கம் அவர்கள் தொடர்ந்தும் பிரிட்டனில் தங்கியிருக்க அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிய வருகிறது. (ஐ)

## சமூகவலைத்தளங்கள் மூலமான மோசடி குற்றங்கள் அதிகரிப்பு!

கொழும்பு, ஜூன் 28

குற்றப் புலனாய்வு திணைக்களத்தால் நடத்தப்பட்ட விசாரணைகளில் பேஸ்புக், வட்ஸ்அப், ரெலிகிராம், ஸ்கைப், வி சாட் போன்ற சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி செய்யப்படும் குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று பொலிஸ் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், அனைத்து மின்னணு மற்றும் அச்சு ஊடகங்களும், பேஸ்புக், வட்ஸ்அப், ரெலிகிராம், ஸ்கைப், வி சாட் போன்ற சமூக ஊடகங்களும் பல்வேறு பெயர்களிள்ள கணக்குகள், வலைதளங்களை அணுக வழங்கப்பட்ட இணைய இணைப் புகள், தெரியாத சமூக வலைப்பின்னல் குழுக்களை அணுகுதல், அவர்களின் அறிவுறுத்தல்களின்படி செயல்படுவதை தவிருங்கள்.

உங்கள் தனிப்பட்ட வங்கிக் கணக்கு விவரங்களை தெரியாத தரப்பினருக்கு வழங்க வேண்டாம். தெரியாத நபர்களிடமிருந்து பெறப்பட்ட பணத்தை மூன்றாம் தரப்பினரின் அறிவுறுத்தலின் பேரில் அவர்கள் வழங்கிய பிற கணக்குகளுக்கு மாற்ற வேண்டாம் என்றும் பொலிஸ் திணைக்களம் கேட்டுள்ளது. (ஐ)

## இறக்குமதியான தரமற்ற உப்பு திருப்பி அனுப்பப்படுகின்றது!

கொழும்பு, ஜூன் 28

இறக்குமதி செய்யப்பட்ட உப்பு அடங்கிய 5 கொள்கலன்களை திருப்பியனுப்ப பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது.

அந்த கொள்கலன்களில் உள்ள உப்பு தொகை இலங்கையின் தர ஆய்வுகளில் நிராகரிக்கப்பட்டமையை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து உப்பு கொள்கலன்களும் தரநிலை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன என்று தெரிவித்த

சுங்க ஊடகப்பேச்சாளர் சீவலி அருக்கொட 5 கொள்கலன்களில் உள்ள உப்பு தொகை தரமற்றவை என கண்டறியப்பட்டன - என்றார்.

உப்பு இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து சுமார் 2000 கொள்கலன்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. உப்பு இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்ட காலவகாசம் கடந்த 10ஆம் திகதியுடன் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிரிட்டன் பயண குற்றச்சாட்டுகளுக்கு ரணில் மறுப்பு

கொழும்பு, ஜூன் 28

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2023ஆம் ஆண்டு செப்ரெம்பர் 8ஆம் திகதியன்று ஐக்கிய இராச்சியத்தில் உள்ள வோல்வர் ஹம்டன் பல்கலைக் கழகத்துக்கு பயணித்தமை தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிமனை விடுத்துள்ள செய்திக் குறிப்பில், இது தொடர்புடைய அனைத்து குற்றச்சாட்டுகளையும் மறுத்து, விரைவில் ஒரு முறையான அறிக்கை வெளியிடப்படும் - என்றுள்ளது. (ஐ)



# கெஹலியவுக்கு எதிரான வழக்கில் டக்ளஸ், ரணில் சாட்சிகளாக பெயர்!

கொழும்பு, ஜூன் 28

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான வழக்கில் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் சாட்சிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

தரமற்ற மனித இம்யூனோகுளோபுலின் குப்பிகளை இறக்குமதி செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் அடிப்படையில், தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கின் சாட்சிகளாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, நிமால் சிறிபால டி சில்வா, விஜயதாச ராஜபக்ஷ, ரொசான் ரணசிங்க ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

அத்துடன், தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையகத்தின் தலைவர் ஆனந்த விஜயவிக்ரம உட்பட மருத்துவர்கள் குழுவும் சாட்சியாகப் பெயரிடப்பட்டுள்ளது.

முறையற்ற இந்த கொள்வனவின் மூலம் 14 கோடியே 44 இலட்சம் ரூபாய் பொது நிதியைத் தவறாகப் பயன்படுத்தச் சதி செய்ததாகப் பிரதிவாதிகள்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.06.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.